பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 29 செவ்வாய்க்கிழமை 14.09.2021 கதிர் 313

**இது ரகசியம் அல்ல!**

நாமல் ராஜபக்ஷ இன்று அமைச்சர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் என்ற முறையில் நீண்ட பல வருடங்களாக எனக்கு அவரை நன்கு தெரியும். நெருக்கமான பழக்கம், பரிச்சயம் உண்டு. இப்போது தந்தையார் பிரதமராகி விட்டார்.

பக்கம்02

# பொறுப்புக் கூறலுக்குச் சம்மதிக்கும் கோட்டாவின் போக்குக்கு வரவேற்பு!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஜெனிவா அமர்வில் நேற்று அறிவித்தார்



இலங்கையில் பொறுப்புக் கூறலை நிலைநாட்டும் விதத்தில் ஐ.நாவுடன் சேர்ந்து பணியாற்ற உறுதிபூண்டு இருப்பதாகவும், அதற்குத் தேவையான நிறுவன ரீதியான சீரமைப்புகளைச் செய்ய தயாராக இருப்பதாகவும், இலங்கையின் ஜனாதிபதி கடந்த ஜூனில் விடுத்த அறிவிப்பை வரவேற்கிறோம். இது தொடர்பில் காத்திரமான - மிகத் திடமான நடவடிக்கைகளை யதார்த்தத்தில் இலங்கை அரசு செயல்முறையாக நடைமுறைப்படுத்துவதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

- இவ்வாறு நேற்று ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நாற்பத்தி எட்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சலி பச்சலட் அம்மையார் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை தொடர்பான விடயத்தில் அவர் குறிப்பிட்ட முக்கிய விடயங்களின் சாராம்சம் வருமாறு:-

☞ 12

# ராணுவத்தின் இறுதி யுத்த வெற்றியில் பங்கு கொண்டாடியவர் சித்தார்த்தன்!





## அவர்கள் விசாரணையை விரும்பாமல் விடலாம் ஆனால் தமிழரசு விடாது என்கின்றார் சுமந்திரன்

கொழும்பு, செப்ரெம்பர் 14

புளொட், ரெலோ தரப்பினருக்கு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நடைபெற்றவை தொடர்பில் நீதி விசாரணை நடக்காமலிருப்பது நல்ல விடயமாக இருக்கலாம். ஏனென்றால், படைத் தரப்பை விசாரித்தால், இறுதி யுத்தத்தில் படைத் தரப்போடு சேர்ந்து செயற்பட்டவர்கள் புளொட் உறுப்பினர்கள். யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்த யுத்தத்தில் எங்களுக்கும் பங்குண்டு என்று இராணுவத்தோடு வெற்றிவாகையைக் கொண்டாடியவர் சித்தார்த்தன். படைத்தரப்போடு யார், யார் ஒட்டுக் குழுக்களாகச் செயற்பட்டார்கள் என்பவையெல்லாம் எங்களுக்குத் தெரியும். ஆகையால், சிலவேளைகளில் அவர்களுக்கு இந்த விசாரணை இல்லாமல் இருப்பது ஒரு நல்ல காரியமாகத் தென்படலாம். ஆனால் தமிழரசுக் கட்சி விடாது. நாங்கள் உறுதியோடு விசாரணையை வலியுறுத்துவோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

☞ 12

## மயங்கி விழுந்து உயிரிழந்த பெண்ணுக்குக் கொரோனா

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், கொட்டடிப் பகுதியில் கோயில் வாசலில் மயங்கி வீழ்ந்து உயிரிழந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை - நெடியகாடு பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான ஸ்ரீ ராஜேந்திரா சந்திரவதனா

☞ 2

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்., உரும்பிராய் பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

☞ 2

## 2,560 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 560 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 88 ஆயிரத்து 482 ஆக அதிகரித்துள்ளது.

☞ 2

## சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த மூதாட்டி மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் பேரனின் சைக்கிளில் பயணித்த மூதாட்டி ஒருவர் தவறி வீழ்ந்து மயங்கியதில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

பொன்னுத்துரை ஆசையம்மா என்னும் 80 வயதுடைய கொடிகாமம், மந்துவில் கிழக்கைச் சேர்ந்த மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 9ஆம் திகதி மந்துவிலில் உள்ள மகளின் வீட்டில் இருந்து பேரனின் சைக்கிளில் இரண்டாவது மகளின் வீடு நோக்கிப் பயணித்த வேளை

☞ 2

## நாட்டில் மேலும் 135 பேரை காவுகொண்ட கொரோனா

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 135 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 431ஆக

☞ 2

## மலையக மக்களின் பிரச்சினைகளும் அடுத்த வருடம் ஐ.நாவில் ஒலிக்கும்!

### மனோ எம்.பி. தெரிவிப்பு

மலையக மக்கள் இந்நாட்டில் எதிர்நோக்கும் அரசியல், சமூக, கலாசார, மனித உரிமை பிரச்சினைகளை அடுத்த வருடம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எடுத்துரைப்போம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித

☞ 12

## மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமனம்

### ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவிப்பு



முன்னாள் நிதி இராஜாங்க அமச்சர் அஜித் நிவாட் கப்ரால், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று அவருக்கு இந்த நியமனம்

☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மகன் அமைச்சராகி விட்டார்.

அவருக்குக் கல்யாணமாகி விட்டது. ஒரு குழந்தைக்கு அவர் தந்தை.

ஆனாலும் எனக்கு ஒரு சந்தேகம் உண்டு. அடுத்த முறை அவரைச் சந்திக்கும் போது நேரடியாகக் கேட்டு விட வேண்டும் என்ற நோக்கம் உண்டு. நிச்சயம் கேட்பேன்.

யாழ்ப்பாணம் வரும் சமயங்களில் எல்லாம் அந்த இளைஞர் – நாமல் ராஜபக்ஷ – திடீரெனக் குமர்ப் பெண் ஆகி விடுகின்றாரோ என்பதுதான் என் சந்தேகம். யாழ்ப்பாணத்துக்கு எப்போது வந்தாலும், வந்ததிலிருந்து திரும்பிப் புறப்படும் வரை எந்நேரமும் இரண்டு உள்ளூர் Bodyguards, பக்கத்தில் இருக்கும் குமர்ப் பெண்ணை யாரும் தூக்கிக் கொண்டு ஓடி விடாமல் காவல் காப்பது போல விடாமல் ஒட்டி ஒட்டிக் கொண்டு திரிவார்கள்.

நாமல் இயற்கைக் கடன் கழிக்கச் சென்றாலும் வாசல் வரைச் சென்று, வெளியே வரும் போது பிறகு திரும்பவும் ஒட்டிக் கொண்டு விடுவார்கள்.

யாழ்ப்பாணத்தில் நாமல் பங்குபற்றும் ஏதேனும் ஒரு நிகழ்வில் இந்த 'பொடி கார்ட்ஸ்' இல்லாமல் நாமல் இருக்கும் ஒரு படத்தைக் கண்டு பிடித்தால் அதற்குப் பரிசு கொடுக்கலாம்.

அந்த பொடி கார்ட்ஸ் யார் என்பதை வாசகர்களே ஊகித்திருப்பர். ஒருவர் சாட்சாத் நம் அமுல்பேபிதான். மற்றவர் அவர் செயலாளர் என்று கூறிக் கொண்டு அலப்பறை பண்ணும் பிரகிருதி. 'பொடி கார்ட்ஸ்' அளவுக்கு சைஸில் இரண்டு பேருமே சரியான ஜாரிக்கு ஜாரிதான். ஜாடிக்கு ஏற்ற மூடிதான்.

தேடித் தேடி வந்து ஒட்டிக் கொண்டே நிற்கும் இந்த இருவரையும் துரத்தவும் முடியாமல், தனது 'பிறைவைசி'யும் கெட்டு, நாமல் அல்லாடுவது அரசல் புரசலாக வெளிப்பட்டுள்ள விடயம். பலரும் பேசும் விவகாரம்.

இப்படி ஒட்டுண்ணி மாதிரி தொற்றிக் கொண்டே – முட்டிக் கொண்டே – அவர்கள் திரிவதற்கு சில காரணங்கள் உண்டு.

★ ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சரின் பெறாமகனுடன் – பிரதமரின் மகனுடன் – யாழ்ப்பாணத்தில் எங்களுக்கு மட்டும்தான் இறுக்கமான தொடர்புண்டு, வேறு யாரும் நெருங்க முடியாது என்று பார்க்கும் மக்களுக்கு பந்தா காட்டுவது.

★ வேறு யாருடனும் இங்கு நாமலுக்குப் புதிதாக பரிச்சயம், நட்பு ஏற்பட்டு விடாமல் பார்த்துக் கொள்வது.

★ யாழ்ப்பாணத்து நிலைமைகள் தொடர்பாக யாரும் அமைச்சர் நாமலுடன், தங்களை மீறிப் பேசவோ, உண்மைகளைக் கூறவோ, நெருங்கவோ விடாமல் அரண் போடுவது.

★ தங்கள் குறித்து ராஜபக்ஷக்களுக்குச் சீற்றம் உள்ளது என்ற உண்மைக் கதையை வெள்ளையடித்து மறைப்பது.

– இப்படி இன்னோரன்ன பல காரணங்கள். சுயமரியாதையை விட்டு, பழகும் 'மனர்ஸ்' மற்றும் நல்ல பண்பியல்புகள் துறந்து, இப்படிக் கேவலமாக அலப்பறை பண்ண அமுல்பேபி அண்ட் கோவால்தான் மட்டுமே முடியும்.

2015 இல் மஹிந்த ராஜபக்ஷ பதவி இழந்திருந்த காலம். அப்போது நாமல் ராஜபக்ஷ வெறும் எம்.பி. மட்டும்தான். யாழ்ப்பாணத்தில் ஒரு டாக்டரின் கலியாண வீட்டுக்குதனி ஒரு வாகனத்தில் எம்.பிக்குரிய பாதுகாவலருடன் வந்திருந்தார் நாமல் ராஜபக்ஷ. இப்போதைய பந்தா ஏதும் அப்போது கிடையாது. முதல் நாள் தமது யாழ்.வருகை குறித்து தேசியப் பட்டியல் எம்.பியான நம் அமுல்பேபிக்குத் தகவல் கொடுத்திருந்தார் நாமல். அடுத்த நாள் யாழ்ப்பாணத்தை நெருங்கும் போது பழக்க தோஷத்தில் அமுல்பேபிக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார் நாமல். மறுபுறத்தில் தொலைபேசி வேலை செய்யவில்லை.

அப்பம் சாப்பிட்டு விட்டு முதுகில் குத்திய மைத்திரியோடு, தோசை சாப்பிடச் சென்றிருப்பார் போலும் நம் அமுல்பேபி. அப்போது நாமல் அவருக்கு ஒரு பொருட்டல்ல. ஒரு சுமை.

2015 தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்ற பின்னர், மொட்டுக் கட்சியை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் ராஜபக்ஷக்கள் ஈடுபட்டிருந்த காலம். கொழும்பு சென்றிருந்த எனக்கு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இரவு விருந்தளித்து உரையாடினார் நாமல் ராஜபக்ஷ. அரசியல் நிலைவரம் பற்றிப் பேசினோம்.

மொட்டுக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் பொறுப்பான ஒருவரைத் தாங்கள் தேடிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற தகவலை நாமல் சொன்னார். மைத்திரியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் அமுல் பேபி மீது அவர்களுக்கு வெளிப்படையாக வெறுப்பு இருந்த காலம் அது.

*"உங்களை நம்பி யாரும் தங்கள் அரசியல் எதிர்காலத்தை 'றிஸ்க்' எடுத்து இப்போதைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து உங்களுடன் வரமாட்டார்கள். ஏனென்றால் நீங்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவீர்கள். அதற்கு நிறைய வாய்ப்புண்டு. அப்படி வந்ததும் பழையபடி ரங்காவுடனும், அமுல்பேபியுடனும்தான் சகவாசம் வைத்து அரசியல் செய்வீர்கள். ஆகவே இங்கு யாழ்ப்பாணத்தில் யாரும் உங்களை நம்புவது துர்லபம்"* – என்று நான் சொன்னேன்.

*"இல்லை இல்லை. இப்போது எங்களுக்கு ஆள்களைத் தெரியும். இனிமேல் அப்படி நடக்காது"* – என்றார் நாமல்.

ஆனால், அதுதான் நடக்கின்றது. ஒரு விடயம். நாமல் விரும்பாமலேயே – அவருக்கு எரிச்சல் தரும் விதத்திலேயே – அவர் யாழ்ப்பாணம் வந்து திரும்பும் வரை, பிசின் போல ஒட்டிக் கொள்கிறது அமுல் பேபி அண்ட் கோவின் இரட்டையர் பொடி கார்ட்ஸ்.

என்ன எண்ணெய் போட்டால் இந்தப் பிசினைக் கழற்றலாம் என்ற சிக்கல் நாமலுக்கு.

இலங்கை முழுவதும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான கண்காணிப்பு மற்றும் ஆலோசனை வழங்குதல் தொடர்பான புதிய அமைச்சு ஒன்று நாமல் ராஜபக்ஷவுக்கு அண்மையில் வழங்கப்பட்டது. அந்த அமைச்சின் கீழ் அபிவிருத்தித் திட்டக் கண்காணிப்புக்காக, அந்த அமைச்சின் ஏற்பாட்டில், கடந்த வாரம் யாழ் வந்திருந்தார் நாமல். அவரது யாழ். வருகைக்கான முழு ஏற்பாடும், நிகழ்ச்சி நிரலும் பிரதமர் அலுவலகத்தினாலேயே ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் அமுல்பேபியோ தமது அழைப்பின் பெயரிலேயே அமைச்சர் நாமல் யாழ்.வந்தார், வருகின்றார் எனத் தனது முகநூல் மூலம் பந்தா காட்டிக் கொண்டிருந்தார்.

அமைச்சர் நாமலின் ஒன்றுவிட்ட அண்ணன் ஷசீந்திர ராஜபக்ஷ. அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் மகன். ராஜபக்ஷக்களின் மூன்றாவது தலைமுறையில் மூத்தவர். அவர் யாழ்ப்பாணம் வரத் திட்டமிட்டார். 'யாழ்ப்பாணம் போவது சரி, அமுல்பேபி அண்ட்கோவின் சகவாசம் இருக்கக் கூடாது' என்று அதி உத்தமர் ஒரு வசனத்தில் கூறியமையால் யாழ் விஜயத்தையே அவர் அடியோடு மறந்து கைவிட்டு விட்டார் என்று உள்வீட்டுத் தகவல் ஒன்று – மிக மிக நம்பகரமான வட்டாரம் ஒன்று – அடித்துக் கூறியது. தேடி வந்து ஒட்டிக் கொண்டு அலப்பறை பண்ணும் அமுல்பேபி அண்ட் கோவின் பெயர் அவ்வளவு பிரசித்தம்.

சில மாதங்களுக்கு முன்னர் நாமல் யாழ்ப்பாணம் வந்தார். தனிப்பட்ட அழைப்பு ஒன்றை ஏற்று 'டான் ரிவி'க்குச் சென்றார். அழைப்பு அமைச்சர் நாமலுக்கு மட்டும்தான், டான் ரி.விக்குப் போட்டியாக தொலைக்காட்சி சேவை நடத்தும் அமுல் பேபி அண்ட்கோவுக்கு அல்ல என்று தெளிவாகக் கூறப்பட்ட பின்னரும், அழைப்பு இல்லாமல் (கூடவே வெட்கமும், ரோசமும் இல்லாமல்) நாமலுடன் ஒட்டிக் கொண்டு உள்ளே நுழைந்தது அமுல் பேபி அண்ட்கோ. அங்கே அமுல்பேபி அண்ட் கோ நடத்திய அலப்பறை குறித்து இப்பத்தியில் நான் ஏற்கனவே எழுதியவற்றை வாசித்த நினைவு வாசர்களுக்கு இருக்கும்.

கடந்த வாரம் யாழ் வந்த நாமலுடன் பல திணைக்கள அதிகாரிகளும் நிர்வாகிகளும் தனித்துக் கலந்துரையாட ஆவலுடன் இருந்தனர். ஆனால் அமுல்பேபி அண்ட்கோ வேண்டுமென்றே அதற்கு இடம் கொடாமல் சதா நேரமும் குமர்ப் பெண் நாமலுடன் ஒட்டிக்கொண்டே நின்று எல்லாவற்றையும் வெட்டிக் குழப்பி விட்டது. தாங்கள் யாரும் அமைச்சருடன் மனம் விட்டுப் பேச முடியவில்லை என்று அமைச்சரின் இணைப்பாளரிடம் விசனம் தெரிவித்துக் கொண்டனர் அரச உயர் அதிகாரிகள் பலரும்.

இதில் வேடிக்கை என்னவென்றால் அமைச்சரின் இணைப்பாளரே அமைச்சர் யாழ் வந்து திரும்பும் வரை அவரை நெருங்கிப் பேச முடியவில்லை. துவார பாலகர் இருவரும் அவ்வளவு ஏக – நெருக்க – கெடிபிடி அமைச்சர் நாமலுடன்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாண மக்களைத் தாம் நெருங்கலாம் என்று எண்ணி இனியும் நேரத்தைச் செலவிடுவார் என்றால் அது வீண்தான்.

அமுல்பேபி அண்ட் கோவின் அலப்பறை தொடரும் வரை – அதை நாமல் ராஜபக்ஷ வெளிப்படையாக வெட்டி ஒதுக்கும் வரை – யாழ். மக்களுடன் நாமல் தொடர்பு வைப்பது என்பதே சாத்தியப்படக் கூடியதல்ல என்பதுதான் என் கணக்கு.

அமைச்சர் நாமலைச் சந்திக்கும் போது அதை நேரில் கூற வேண்டும். அதற்கும் அமுல்பேபி அண்ட் கோ இடமளிக்காமல் இடைஞ்சலாக இருந்தால் என்ன செய்வது? கொழும்பில் தனியச் சந்தித்தாவது இதனை நாமலிடம் கூறவேண்டும். பாவம் குமரிப் பெண் போல யாழில் அல்லாடும் நாமல் ராஜபக்ஷ..!

– மின்னல் –

---

## மயங்கி விழுந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

(வயது 68) என்பவர் நேற்றுமுன்தினம் யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறையிலிருந்து யாழ்., கொட்டடி ஆலயம் ஒன்றுக்கு வந்திருந்தார்.

ஆலய வாசலில் நின்றிருந்தபோது திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்திருந்தார்.

அவருடைய மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார்.

அதன் தொடராக நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த பெண்ணுக்குகே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2, 560 தொற்றாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 1,483 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 14 ஆயிரத்து 295 ஆக உயர்வடைந்துள்ளது.

---

## சைக்கிளிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீதியில் தவறி வீழ்ந்தமையால் மயக்கம் அடைந்துள்ளார்.

அவர் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இவ்வாறு மாற்றப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

உயிரிழந்தர் தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டு உடலை பி.சி.ஆர். பரி சோதனைக்கு ஒப்படைத்தார்.

---

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மணியந்தோட்டத்தையைச் சேர்ந்த கே.குணரத்ன (வயது 67) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் ஊரெழு பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் தொழில் நிமிர்த்தம் சென்று வீடு திரும்பிய வேளை உரும்பிராயில் எதிரே வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும், அவர் அங்கு சிறிது நேரத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

---

## நாட்டில் மேலும் 135...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சாவடைந்த 135 பேரில் 71ஆண்களும், 64 பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் 12 ஆண்கள், 14 பெண்கள் என 26 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 109 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 59 ஆண்களும், 50 பெண்களும் அடங்குகின்றனர்.

---

## மத்திய வங்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாளை 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் பேராசிரியர் டபிள்யு.டி. லக்ஷ்மன் இன்றுடன் ஓய்வுபெறவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

அஜித் நிவாட் கப்ரால், முன்னதாக 2006ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 9 வருடங்கள் மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவி வகித்தார்.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதையடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு தமக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்று அஜித் நிவாட் கப்ரால் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.



# ஐ. நா.மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது தொடரே மிக முக்கியமானது

## சுமந்திரன் எம்.பி. கருத்து



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆம் கூட்டத்தொடரே மிக முக்கியமானது. தற்போதைய 48 ஆவது கூட்டத்தொடர் மற்றும் 50 ஆவது கூட்டத்தொடரில் இந்த விடயம் தொடர்பாக வாய்மூல அறிக்கையை உயர்ஸ்தானிகர் சமர்ப்பிப்பார்.

ஆனால் அது இலங்கை விடயத்தில் பெரிதாக தாக்கத்தை செலுத்தாது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அனுப்பிய கடிதத்தில் விடுதலைப் புலிகள் செய்த குற்றங்களை விசாரியுங்கள் என எங்கேயும் கூறவில்லை. சுயாதீன விசாரணையை நடத்தவேண்டும் என்றே வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகள் தொடர்பாகக் கருத்துக்கள் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

கடந்த மார்ச் மாதத்தில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் முக்கியமான கூட்டத்தொடராகும்.

40/1 தீர்மானம் நிறைவுக்கு வருகின்ற போது இன்னொரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

ஆகவே இது தொடர்பாக நாம் தமிழர் தரப்பாக ஒன்றிணைந்து ஆவணம் ஒன்றைத் தயாரித்து அதில் மாற்றங்களை செய்து அனுப்பிவைத்தோம்.

நாம் அனைவரும் ஒரே நிலைப்பாட்டை எடுத்து அதனை அனுப்பியிருந்தோம். அதன் பின்னர் மார்ச் மாதத்தில் 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அப்பொழுது அடுத்த செப்டெம்பர் மாத அமர்வில் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. இது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆம் கூட்டத்தொடரில் இடம்பெறும்.

அதற்கிடையில் இரண்டு தடவைகள் அதாவது 48 ஆவது கூட்டத்தொடர் மற்றும் 50 ஆவது கூட்டத்தொடரில் இந்த விடயம் தொடர்பாக வாய்மூல அறிக்கையை உயர்ஸ்தானிகர் சமர்ப்பிப்பார்.

இந்த தொடர்களில் வாய்மூல முன்னேற்ற அறிக்கை மட்டுமே சமர்ப்பிக்கப்படும். மாறாக எழுத்தறிக்கை, பிரேரணைகள் என எதுவுமே முன்வைக்கப்படப்போவதில்லை. இதற்கு நாம் ஆவணம் அனுப்ப வேண்டுமா என்ற கேள்வியும் உள்ளது.

எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் கடந்த 30/1 பிரேரணை கொண்டுவரப்பட்டதிலிருந்து, அதாவது இலங்கை அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை செய்வதாக ஒப்புக்கொண்டதிலிருந்து அது குறித்து ஆராய்ந்து தொடர்ச்சியாக தெரியப்படுத்தி வருகின்றார்.

குறிப்பாக சுயாதீன நிறுவனம் ஒன்று இது தொடர்பில் சுயாதீனமாக ஆய்வுகளை செய்தால் அதனை காரணமாக வைத்து அறிக்கையிட தீர்மானித்திருந்தார்.

அவ்வாறான ஆய்வொன்று இலங்கையின் ஆய்வு நிறுவனம் ஒன்றால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே அவர்களின் அறிக்கையை சுட்டிக்காட்டி கடிதமொன்றை வரைந்து அனுப்பியுள்ளோம்.

விடுதலைப் புலிகள் செய்த குற்றங்களை விசாரியுங்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு அனுப்பிய கடிதத்தில் எங்கேயும் கூறவில்லை.

இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட அறிக்கைகளை கொண்டும் அவற்றை சுட்டிக்காட்டியும் சுயாதீன விசாரணை பொறிமுறையை மேற்கொள்ளவேண்டும் என்பதையே சுட்டிக்காட்டியுள்ளோம்.

இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம்பெற்றன எனக் கூறப்படும் சகல அறிக்கையிலும் இரு தரப்பும் செய்த குற்றங்கள் என்பதையே சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் சர்வதேச சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்கும்போது இரண்டு தரப்பு விசாரணைகளும் முன்னெடுக்கப்படும்.

சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்றால் இரு பக்க விசாரணை இடம்பெறும். அதனை எம்மால் நிராகரிக்க முடியாது.

கடந்த மார்ச் மாதத்திலும் இந்த அறிக்கையை ஆதரித்தே சகல தரப்பும் கையொப்பமிட்டது. எமது நிலைப்பாட்டில் நாம் தெளிவாக உள்ளோம். இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் இராணுவம் போர்க் குற்றங்களை செய்ததாக குற்றம் சுமத்தி எமது பக்கம் நியாயம் உள்ளதென உறுதியான நிலைப்பாட்டில் இருந்து கொண்டு சுயாதீன விசாரணையை கோருகின்றோம்.

சுயாதீன விசாரணையை கோரும் நாம் பக்கசார்பான விசாரணையை கோர முடியாது. இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு சுயாதீன விசாரணை நடத்தி நீதி கிடைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இதற்கு எம்மில் ஒரு சிலர் முரண்படலாம். அதற்கு நாம் பொறுப்பல்லர். ஜனநாயக வழியில் இராஜதந்திர ரீதியில் தீர்வுகளை பெற்றுக்கொள்ள நகர்கின்றோம். இதில் இலங்கை படைத் தரப்புக்கு எதிராகவே பலமான தீர்மானம் வரும்.

அதேவேளையில் ஆயுதக் குழுக்கள் மேற்கொண்ட குற்றங்களுக்கும் தீர்ப்பு கிடைத்தால் அதற்கு எம்மால் எதனையும் செய்ய முடியாது. நீதியை மக்களே கோருகின்றனர். இதில் நாம் எந்தவொரு அரசியல் கட்சியின் கருத்தையும் கருத்திற்கொள்ள முடியாது. – என்றார்.

# கொவிட் தொற்றாளர்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## ஐ.டி.எச். வைத்தியசாலை பணிப்பாளர்

கொழும்பு, செப். 14

அங்கொடை தொற்று நோய்களுக்கான சிகிச்சை நிறுவனத்துக்கு (ஐ.டி.எச். வைத்தியசாலை) சேர்க்கப்பட்டிருக்கும் கொவிட் நோய் தொற்றாளர்களின் எண்ணிக்கை 180 வரை குறைந்திருப்பதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஹசித்த அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சேர்க்கப்பட்டிருந்த கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 230 வரை அதிகரித்திருந்தபோதும் அது தற்போது படிப்படியாக குறைந்து வருகின்றது.

அதேபோன்று கொவிட் மரணங்களும் வைத்தியசாலையில் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்து வருகின்றன எனவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் கொவிட் மூன்றாம் அலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஐ.டி.எச். வைத்தியசாலையில் நோயாளர்களை அனுமதிக்க முடியாதளவுக்கு இடப்பற்றாக்குறை இருந்தது.

என்றாலும் தற்போது அந்த நிலைமை இல்லை. ஒட்சிசன் தேவையுடைய கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கையும் 30 தொடக்கம் 40 வரையில் குறைவடைந்திருக்கின்றது. இதற்கு முன்னர் ஒட்சிசன் தேவையுடைய கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை 70 வரை இருந்தது.

அத்துடன் வைத்தியசாலையின் அனைத்து வாட்டுகளுக்கும் தேவையான ஒட்சிசன் வசதிகளை விநியோகிப்பதற்கு முறையான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது எனவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஒட்சிசன் தேவைப்பாடு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அளவைவிட அதிகரித்திருந்தது. அதனால் இந்தியாவில் இருந்து ஒட்சிசன் இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அகதி முகாமிலுள்ள மலையகத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்தல்

இந்திய அகதி முகாமிலுள்ள மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கி, இந்திய வம்சாவளி மக்களாக அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதற்கு தமிழக அரசும் இந்திய அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.



திருச்சிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வே.இராதாகிருஷ்ணன், அங்குள்ள ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் மீண்டும் இலங்கையில் குடியேற நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தமிழக முதல்வரின் அறிவிப்புக்கு நன்றி.

மேலும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தமிழகத்தில் தங்கியுள்ளவர்கள் மற்றும் இலங்கையில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட மலையகத் தமிழர்கள் அகதிகள் முகாமில் உள்ளனர்.

இலங்கையில் கடந்த 10 வருடங்களாகப் போர் பிரச்சினைகள் இல்லை. மறுவாழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில், விரும்பிய வடக்கு – கிழக்கு தமிழர்கள் இலங்கையில் மீண்டும் குடியேறுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கைகள் ஏற்படுத்தி வருகிறது.

இதேவேளை கடந்த 30 வருடங்களாக தமிழகத்தில் வந்து தங்கியுள்ள மலையகத் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்கு வருவதில் எந்த பிரயோசனமும் இல்லை.

மலையக பகுதியில் மீண்டும் வேலை செய்வதற்கு வாய்ப்புகள் இல்லை. தோட்டத்தில் மட்டுமே அவர்கள் வேலை செய்ய முடியும். சொந்தக் காணி கிடையாது.

எனவே தமிழக முதல்வர் இதனையும் கருத்தில் கொண்டு மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கி, இந்திய வம்சாவளி மக்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழக அரசும் இந்திய அரசும் உரிய நடவடிக்கையை இதற்காக மேற்கொள்ள வேண்டும். – என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இலங்கைக்கான ஆப்கான் தூதுவர் தலிபான்களை அங்கீகரிக்க மறுப்பு

தலிபான்களின் இடைக்கால அமைச்சரவையை அங்கீகரிக்க இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் மறுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதாரி, தலிபான் அரசாங்கம் சட்ட விரோதமானது என இலங்கை அரசு மற்றும் கொழும்பிலுள்ள இராஜதந்திர சமூகத்துக்கு கடிதம் ஒன்றின் ஊடாக வலியுறுத்தியுள்ளார்.

இந்த வாரம் இடைக்கால அமைச்சரவை மற்றும் பிரதமரை நியமிப்பதாக தலிபான் அறிவித்திருந்தது. இந்நிலையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் தூதுவர்கள் யாரும், தலிபான்களின் இடைக்கால அமைச்சரவையை வரவேற்கவில்லை என்றும் தூதுவர் ஹைதாரி இலங்கையிலுள்ள ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தலிபான் அமைச்சரவை, ஐ.நாவால் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தப்பட்டவர்களை கூட அதன் தலைவராக உள்ளடக்கியுள்ளதுடன் பெண்கள், இஸ்லாமிய குடியரசு அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் அனைத்து இன, மத மற்றும் சிறுபான்மையினரையும் விலக்கியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு மற்றும் வெளிநாட்டு உளவுத்துறை தலைவரால் நிறுவப்பட்ட இந்த அமைப்பு, அனைத்து ஆப்கானியர்களால் நிராகரிக்கப்பட்டது மற்றும் முழு சர்வதேச சமூகத்தால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது என்றும் அஷ்ரப் ஹைதாரி கூறியுள்ளார்.

இந்நிலையில் உலகெங்கிலும் உள்ள அனைத்து ஆப்கானிஸ்தான் தூதரகங்களும் தங்கள் வழக்கமான கடமைகளைத் தொடரும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ஆப்கானிஸ்தான் ஒரு பரந்த அடிப்படையிலான மற்றும் பிரதிநிதித்துவ அரசாங்கத்தை விரும்புகிறது என்றும் தூதுவர் கூறியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சிக்கலில் ராஜபக்ஷக்கள்

“வாயைக் கொடுத்து வினையை வாங்கிக் கொள்வது” – என்பார்கள். அப்படிப்பட்ட சிக்கலில் மாட்டுவது ராஜபக்ஷக்களுக்கு வழமையான விவகாரமாகி விட்டது போலும்.

அதுவும் சர்வதேச மட்டத்தில் – ஐ.நா. தளத்தில் – அப்படிச் சிக்குவது அவர்கள் வாடிக்கையாகி விட்டது.

2009ஆம் ஆண்டு மேயில் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்ட மமதைத் திமிரில் – மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் – இருந்தார் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

யுத்த முடிவில் நிலைமையைப் பார்வையிட இலங்கை வந்தார் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன். ஆரவாரத் திளைப்பில் அவருடன் இணைந்து கூட்ட றிக்கை வெளியிட்ட மஹிந்தர், அந்தக் கூட்டறிக்கையில் இருந்த பொறியைக் கவனிக்கவில்லை அல்லது அந்த பொறியின் நீள, ஆழ, அகலத்தை அவர் புரிந்துக் கொள்ளவில்லை போலும்.

யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களுக்கான பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதற்கு இலங்கை ஜனாதிபதி இணங்குகின்றார் என்ற ஒரு வாசகத்தை அந்த கூட்ட அறிக்கையில் சேர்க்க வைத்தனர் ஐ.நா. அதிகாரிகள்.

ராஜபக்ஷக்கள் தங்களுக்குத் தாங்களே சூனியம் வைத்துக் கொண்ட சிக்கல் அங்குதான் ஆரம்பமானது. ராஜபக்ஷக்களுக்கு எதிரான சர்வதேச அழுத்தத்தின் நெருக்கடி அங்கிருந்துதான் தொடங்கியது. இன்று வரையும் கழற்ற முடியாத – கழற முடியாத – பிணிபோல அவர்களைப் பிணித்துத் தொடருகின்றது அது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியீட்டிய கோட்டாபய ராஜபக்ஷ, அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலில் கிட்டிய மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வெற்றியையும் அடுத்து, அந்தச் சர்வதேச பொறியிலிருந்து வெற்றிகரமாக கழன்று விடலாம் எனக் கங்கணம் கட்டிக் கொண்டார்.

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட அனைத்துத் தீர்மானங்களில் இருந்தும் தாங்கள் வெளியேறுகின்றார்கள் என அறிவித்தார். ஒரு தலைப்பட்சமாகத் தாங்கள் வெறியேறி விட்டமையால் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட எந்தத் தீர்மானமும் தங்களைக் கட்டுப்படுத்தாது என்று மார்தட்டினார். அதனையே தமது நிலைப்படாகவும், தமது அரசின் கொள்கை முடிவு என்றும் கூட அவர் பௌத்த, சிங்களைப் பெரும்பான்மையினர் மத்தியில் பறைதட்டினார். ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை அரசை ஒன்றும் பிடுங்க முடியாது என்ற பாணியில் செருக்கு உரைகளை அவரும், அவரது அரசியல் பிரதானிகளும் பகிரங்கமாகப் புசத்தினார்.

ஆனால், ஜனாதிபதி கோட்டாபய என்றோ ஒருநாள் தமது டுவிட்டரில் தாம் அறியாமல் வெளியிட்ட ஒரு குறிப்பைப் பயன்படுத்தி அவரையும் அவரது அரசையும் தமது பொறிக்குள் சிக்க வைக்க முயன்றிருக்கின்றார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செலி பச்சலெட் அம்மையார்.

யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதற்கு ஐ.நாவுடன் சேர்ந்து செயற்படத் தயார் என இலங்கை ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார் என்று குறிப்பிட்டு, அதனை வரவேற்று, அந்த இணக்கத்தை திடமான செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் செயலில் நிரூபிக்கும்படி இலங்கை ஜனாதிபதியைக் கோரியிருக்கின்றார் ஆணையாளர்.

இது தொடர்பில் அவருக்கும், ஐ.நா. கட்டமைப்புகளுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், இலங்கைப் பொது மக்களுக்கும் – குறிப்பாக பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் – ஜனாதிபதி கோட்டாபய தரப்போகும் பதில் யாது?

ஐ.நாவுடன் சேர்ந்து பொறுப்புக் கூறல் பொறிமுறையை முன்னெடுப்பேன் என்று நான் கூறவில்லை என்று இனி மறுப்பாரா அவர்?

# 25 ஆயிரம் கல்விசாரா ஊழியர்கள் இதுவரை தடுப்பூசி பெறவில்லையாம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிக்கை

பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகளை நடத்துபவர்கள் , பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடுபவர்கள் மற்றும் ஏனைய சிற்றூழியர்கள் உள்ளிட்ட கல்வி சாரா ஊழியர்களில் சுமார் 25 ஆயிரம் பேர் இன்னமும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவில்லை என்று தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறானவர்கள் துரிதமாக தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அத்தோடு 12 - 18 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் பணிகளை சிறுவர் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்கள் காணப்படுகின்ற வைத்தியசாலைகளிலேயே வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறான நடவடிக்கை எடுத்தால் மாத்திரமே தடுப்பூசி வழங்கிய பின்னர் ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்பட்டாலும் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாக இருக்கும் என்றும் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் சுட்டிக்காட்டினார்.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் பணிகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தற்போது கல்வி அமைச்சின் கீழுள்ள கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கான தடுப்பூசி வழங்கும் பணிகள் நிறைவடையும் தறுவாயிலுள்ளன.

எனினும் இதன் போது பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகளை நடத்துபவர்கள், பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபவர்கள் மற்றும் ஏனைய சிற்றூழியர்கள் உள்ளிட்ட சுமார் 25 ஆயிரம் பேர் இன்னும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறானவர்களுக்கு இடையூறின்றி தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பை உரிய தரப்பினர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவை தவிர பாடசாலைகளை எவ்வாறு ஆரம்பிப்பது என்பதற்கான பொறிமுறையும், அதற்கேற்ப மாணவர்களுக்கு எவ்வாறு கட்டம் கட்டமாக தடுப்பூசியை வழங்குவது என்பதற்கான பொறிமுறையும் உருவாக்கப்பட வேண்டும். - என்றார்.

# தொடர் மன அழுத்தத்தால் விபரீத முடிவு எடுக்கும் அபாயத்தில் சிறைக்கைதிகள்

### குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவிப்பு

நாட்டில் தடுப்புக் காவலிலுள்ள சிறைக்கைதிகளில் பலர், தொடர் மன அழுத்தம் காரணமாக தற்கொலை முயற்சி மற்றும் போதைக்கு அடிமையாகுதல் போன்ற விபரீத நிலைக்கு செல்லும் அபாயம் உள்ளதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குரலற்றவர்களின் குரல் அமைப்பு மேலும் கூறியுள்ளவை வருமாறு -

நாட்டிலுள்ள 26 சிறைச்சாலைகளில் சுமார் 20 ஆயிரத்து 228 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அதாவது, நாட்டினுடைய சிறைக்கட்டமைப்பின் பிரகாரம் சுமார் 12 ஆயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்துப் பராமரிக்க முடியும் என சிறைத்துறை தலைமையகம் கூறியுள்ளது.

மேலும், நாட்டுக்குள் அன்றாடம் அதிகரித்துச்செல்கின்ற குற்றச்செயல்கள் காரணமாகவே சிறைக்கூடங்கள் நிரம்புகின்றன எனக் கூறிவிட்டு வெறுமனே ஒதுங்கிவிட முடியாது.

வளப்பற்றாக்குறைகளை கோடிட்டுக் காட்டிக்கொண்டிருக்கும் சட்டம் மற்றும் நீதித்துறையின் தாமதம், கைதிகளுக்கான நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதிலிருந்து தூரமாகவே நிற்கிறது.

சட்டத்துறை காரியாலயத்திலும் நீதிமன்றங்களிலும் வழக்குக்கோவைகள் குவிந்து கிடக்கின்றன.

வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுமென நீதி அமைச்சு தெரிவித்து வருகின்றது. ஆனாலும் பெரும்பாலான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் நீண்டகால தவணைத் திகதியிடப்பட்டு வருவதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

விசேடமாக இரண்டு தசாப்த காலங்களுக்கும் மேலாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக ‘ஸ்கைப்’ தொழிநுட்பத்தின் வழியே நீதிவான் ஊடாக நீதிமன்ற வழக்குகள் இடம்பெற்று வருகின்ற போதும், பாதிக்கப்பட்ட தரப்பு நியாயங்களை நேரடியாக மன்றுக்கு எடுத்துக்கூறி முறையிடுவதில் இடையூறுகள் காணப்படுகின்றன.

நடைமுறையிலிருந்துவந்த தண்டனைக் கைதிகளுக்கான வீட்டு விடுப்பு வழங்கும் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு சமூக பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துவரும் தமது அன்புக்குரிய உறவுகளைப் பார்த்துப்பேசுவதற்கு கைதிகளால் முடியாமல் இருக்கின்றது.

மேலும், ஊட்டச்சத்துடன் கூடிய போசாக்கான உணவு, போதுமான மருத்துவ வசதி மற்றும் அத்தியாவசியத்தேவைகளை ஈடு செய்ய முடியாமல் கைதிகள் விரக்தியடைந்துள்ளார்கள்.

இவ்வாறான விடயங்களால் சிறைத்தடுப்பில் உள்ளவர்கள் இயல்புக்கு மாறான உடல், உள நெருக்கீடுகளுக்கு உள்ளாகி வருகின்றனர் எனக் கைதிகளின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் கவலையில் உள்ளனர்.

அத்துடன் தொடர் மன அழுத்தம் வன்முறை, போதைக்கு அடிமைப்படுதல், தற்கொலை எண்ணம் போன்ற விபரீத நிலைக்கு கைதிகளை இட்டுச்செல்லும் அபாயம் ஏற்படலாம். - என அந்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# 200 இற்கு குறைவான மாணவர்களுடைய பாடசாலைகள் அடுத்த மாதம் திறப்பு?

200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை அடுத்த மாதத்தில் மீண்டும் திறக்க முடியும் என நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.

கொரோனா தடுப்பு செயலணியுடன் இணைந்த இந்தக் குழுவால் எட்டப்பட்ட பரிந்துரைகள் செப்டெம்பர் 17 ஆம் திகதி ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட கிராமப்புறங்களில் உள்ள சுமார் 3 ஆயிரம் பாடசாலைகளை ஆரம்பத்தில் மீண்டும் திறக்க முடியும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் குறித்த பாடசாலைகளை ஒரு முறையான திட்டத்தின் கீழ் திறக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சருக்கு வழங்கிய பரிந்துரையில் அந்தச் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. 12 - 18 வயதுடைய மாணவர்களுக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரையின் படி பைஸர் தடுப்பூசியை செலுத்த வேண்டும் என்ற பரிந்துரையும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் முன்வைக்கப்பட்டது.

அதன்படி மாணவர்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதற்காக ஒக்ரோபர் மாதத்தில் இலங்கைக்கு பைஸர் தடுப்பூசியின் 40 லட்சம் டோஸ் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் -75

ந.வித்தியாதரன்

ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் ஐயா குறித்து மற்றொரு தமிழ் ஊடக இமயமாக விளங்கிய அமரர் இரா.பத்மநாதன் 'ஈழத்தின் இணையற்ற எழுத்துச் சிற்பி' என்ற தலைப்பில் தொடராக எழுதிய அனுபவப் பகிர்வின் ஒரு பகுதியை நேற்றும் முன்தினமும் பார்த்தோம்.

இன்று சிவநாயகம் ஐயாவின் கீழ் பிரதேச செய்தியாளராக பணியாற்றி, ஊடகத்துறையில் பல உயர் பதவிகளை வகித்து, தற்போது நியூசிலாந்தில் வசிக்கும் மரியாம்பிள்ளை வரதராஜன், சிவநாயகம் ஐயா பற்றி கடந்த ஆண்டு அவரது நினைவு தினத்தின் போது 'ஊடகப் பெருந்தகை எஸ்.டி.சிவநாயகம்' என்ற தலைப்


மாஸ்டர் சிவலிங்கம்

பில் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது. ஒரு பிரதேச செய்தியாளரின் மனதில் கூட ஒரு திறமையான பத்திரிகை ஆசிரியரின் ஆளுமை எவ்வாறு ஆழமாகக் கோலோச்ச முடியும் என்பதற்கு இந்த கட்டுரை நல்ல எடுத்துக்காட்டு. நான் நினைக்கிறேன் தமிழ் ஊடகத்துறையில் குரு - சிஷ்ய முறையில் வாண்மை பெற்ற தலைமுறையின் கடைசி அங்கங்களாக நான், வரதராஜன் போன்றோர் இருக்கக் கூடும். வரலாறுதான் அதன் முடிவை அறுதியிடும். வரதராஜனும் நானும் உதயன் பத்திரிகைக்கு அத்திபாரம் போட்டமையில் ஒன்றுபட்டு நின்றவர்கள். சரி, இனி நண்பன் வரதராஜனின் கட்டுரைக்குள் போவோம், வாருங்கள்:-

இலங்கையின் தமிழ் இதழியல் வரலாற்றில் தமது இடத்தை வேறு எவராலும் நிரப்பமுடியாத சிறப்பான ஓர் ஆளுமையாகத் திகழ்ந்தவர் அமரர் எஸ்.டி.சிவநாயகம் ஐயா அவர்கள்.

1948 இல் தினகரனில் தமது பத்திரிகைப் பணியை ஆரம்பித்த அவர் பின்னர் தமிழரசுக் கட்சியின் சுதந்திரன் வார இதழிலும் அதைத்தொடர்ந்து வீரகேசரியிலும் பணியாற்றி, எம்.டீ.குணசேன நிறுவனத்தின் சுயாதீன பத்திரிகா சமாஜ நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட நாளிதழான தினபதி, வார இதழான சிந்தாமணி ஆகியவற்றின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றினார்.

சுதந்திரனை புதுமையாக வடிவமைப்பதிலும் அதன் சொல், வசன அமைப்பிலும் எளிமையாக எல்லோரும் வாசிக்கக்கூடிய மாற்றங்களைப் புகுத்தியவர் அவர் என அமரர் இரா.பத்மநாதன் அவர்கள் சொல்வார்கள் .

ஒருமுறை வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் செய்திகள் பற்றி அமரர் சிவநாயகம் எனக்குச் சொல்லும்போது, சுதந்திரன் இதழை அது வெளிவந்த காலத்தில் சில இடங்களில் ஒருவர் வாசிக்க பலர் சூழ விருந்து கேட்பதுண்டு - என்றார். அது வாசிக்கப்படும் போது இலகுவாக மற்றவர்களின் செவிகளிலும் புக வேண்டும் என்பதால் குறைந்த சொற்களில் எளிய வசனங்களில் விளங்கும் வகையில் தாம் சுதந்திரனை அமைத்ததாகச் சொன்னார்.

நான் தினபதியில் 1983 இல் உடுப்பிட்டித் தொகுதி நிருபராக நியமனம் பெற்றேன்.

மூன்று மாதங்களுக்கு நாங்கள் எழுதும் செய்திகளுக்கு வேதனம் வழங்கப்படுவதில்லை. அதற்குப்பின்னரும் நான் பல முக்கிய செய்திகளைக் கொடுத்தபோதிலும் அவை முன் பக்கத்தில் வந்த போதிலும் நிருபரின் பெயர் இடப்படாமலே செய்தி இடப்படும் வழக்கம் தினபதியில் இருந்தது.

தினபதியின் செய்திகளின் வடிவம் ஏனைய தமிழ்த்தினசரிகள் அனைத்தினின்றும் வேறுபட்டேயிருந்தது. அதனை 'சிவநாயகம் ஸ்டைல்' என்று தமிழ் ஊடகத்துறையில் சொல்லும் வகையில் தினபதியின் செய்தியின் சொல், வசன, பந்தி அமைப்புகள் இருந்தன.

தாங்கள் அனுப்பும் செய்திகள் அச்சில் வரும்போது அவற்றை வாசிப்பதன் மூலமும், ஏனைய செய்திகளை வாசிப்பதன் மூலமுமே தொகுதி ரீதியாகப் பணியாற்றிய செய்தியாளர்கள் 'சிவநாயகம் ஸ்டைல்' என்ற தினபதிப் பாணியைக் கற்றுக் கொண்டனர்.

பருத்தித்துறை ஜெயக்குமாரோ, உடுப்பிட்டி வரதராஜனோ, யாழ்ப்பாணம் அரசாரத்தினமோ, நிந்தவூரிலிருந்து சலீமோ, மட்டக்களப்பலிருந்து யோசப்போ, வவுணதீவிலிருந்து உதயகுமாரோ, திருமலை நிருபர் குருநாதனோ எவர் செய்தி எழுதினாலும் செய்தியைப் பார்த்துவிட்டு இது தினபதிச் செய்தி என்று சொல்லும் வகையில் அதன் வசன நடைகள் அமைந்திருக்கும். அப்படியானதொரு செய்தி வடிவ ஒருமையைத் தினபதியில் அவர் ஏற்படுத்தியிருந்தார்.

இன்று, ஒரு செய்தியைக் காட்டி இது எந்த ஊடகத்தில் வந்தது என்று கேட்டால் அதன் ஆசிரியராக இருப்பவருக்கே தெரியாத நிலையிலேயே தமிழும், வசனங்களும் பலவற்றில் உள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது.

தினபதியில் முதற்பந்தி எத்தனை வசனங்களுடன், அடுத்த பந்திகள் எத்தனை வசனங்களுடன் என, கடைசிப்பந்தி எப்படி முடியவேண்டும் என்றெல்லாம் எல்லா நிருபர்களுக்கும் தெரிந்திருந்தது . ஆரம்பத்தில் எப்படி எழுதவேண்டும் என விளக்கமாக அறிவிக்கப் படுவதுண்டு.

இதைவிட 'சிவநாயகம் ஸ்டைல்' என இன்னுமொன்று குறிக்கத்தக்கது.

ஒரு வசனத்தில் 'அவர் தெரிவித்தார்' என்று முடித்தால், மறு வசனத்தில் 'குறிப்பிட்டார்' என்றும், அடுத்த


ராஜா மகேந்திரன்

தில் 'சொன்னார்' என்றும் எழுதும் வழமையைத் தினபதி கற்பித்தது.

'சொன்னார்' - என்ற சொல்லை ஏனைய தமிழ் இதழ்கள் அப்போது பாவித்ததில்லை. எனினும் தெரிவித்தார், குறிப்பிட்டார், சொன்னார் என்பவற்றை எங்கு எங்கு பாவிக்கவேண்டும் என்பதையும் தினபதியே கற்பித்தது.

'நாடாளுமன்றம்' என்ற சொல்லை தினபதி தனது செய்திகளில் பாவித்தது. 'கணினி' என்ற சொல்லை அறிமுகம் செய்தது.

சிவநாயகம் பற்றிப் பேசும்போது இவை போன்ற பல விடயங்கள் வருவது வழக்கம்.

அவற்றில் சிலவற்றையே இங்கு பதிவு செய்துள்ளேன்.

தேசிய நாளிதழ்களின் பிரதம ஆசிரியராக இருந்த போதிலும் தமது படத்தை தமது பத்திரிகைகளில் பிரசுரிக்காத ஒருவர் அவர். நான் சக்தி தொலைக்காட்சியில் இணைந்தபோது மஹாராஜா நிறுவனத்தின் தலைவரான திரு.ஆர்.ராஜமகேந்திரன் அவர்கள் தமது முகத்தை தமது ஊடகங்களில் காட்டுவதற்கு விரும்புவதில்லை என அறிந்தேன். அங்கு இடம்பெறும் வைபவங்களில் அவரை எடுக்கக்கூடாது என ஒளிப்பதிவாளர்களுக்கும் எமக்கும் பணிக்கப்பட்டிருந்தது, சக்தியில் செய்தி ஆசிரியராக பணியாற்றிய செல்வராஜா *"இவரும் எங்கட சிவநாயகத்தார் மாதிரித்தான் வரதா, தன்னுடைய ஊடகங்கள் எதிலுமே தன்னைக் காட்டக்கூடாது என்*




*பதே அவர் விருப்பம்"* - என்று சொன்னதை நினைக்கும்போது ஊடக ஆளுமைகள் என்றால் இப்படியும் ஒரு வரைவிலக்கணம் உண்டோ என நான் நினைப்பது உண்டு.

சிவநாயகம் அவர்கள் கொழும்பு சத்திய சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைவராக 25 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார் . 1975 ஆம் ஆண்டில் இந்தியாவில் புட்டபர்த்தி நகரில் நடைபெற்ற, உலக சாயி நிறுவனங்களின் மாநாட்டில் இலங்கையின் சிறப்புப் பிரதிநிதியாகப் பங்குபற்றினார். கொழும்பு சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைவராக அவர் நீண்ட காலம் இருந்தார். ஆனால் நிலையத்தின் வைபவம் ஒன்றில் அவர் உரையாற்றும் படம் ஒன்றை நான் வீரகேசரியில் தான் பார்த்தேன். அப்போதுதான் இவர்தான் சிவநாயகம் என தினபதி நிருபராக இருந்த எனக்கு அறிய முடிந்தது.

தினபதியின் இலக்கியப் பணியை இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல இலக்கியப் பிரமுகர்களும் சொல்வார்கள். தினபதியின் கவிதா மண்டலத்தில் எழுதி அறிமுகமான பலர் இன்று பெரும் எழுத்தாளர்களாகவும் பேராசிரியர்களாகவும் உள்ளனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)


வரதராஜன்



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

அங்கம் - 130

**354.அப்படியானால் புலம்பெயர் அமைப்புக்களைச் சேர்ந்தோர் விடுதலை நோக்குக்கான கட்டுக்கோப்புக்களை இழந்து விட்டார்களா?**

“விடுதலை நோக்குக்கான” என்று நீங்கள் கேட்கும்போது எந்த விடுதலை” என்று கேட்கத் தோன்றுகிறது. டக்ளஸ் மாநிலத்தில் சுய ஆட்சி, மத்தியில் கூட்டாட்சி என்று பல காலமாக அரசுகளினுடன் பயணிக்கிறார். கருணாவும் பிள்ளையானும் பிரிந்து நோர்வே பேச்சுக் காலங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ராஜபக்ஷவுக்குக் கைகொடுத்தனர். போரின் முடிவில் கே.பி. அரசுடன் நின்றார். இன்று புலம்பெயரில் அந்த மாற்றங்கள் வேண்டுமென்கிறார் வியாழேந்திரன். அவரும் அரசுடன் இணைந்தார். அவர்களோடு சிலர். இவர்கள் எல்லோரும் சேர்ந்தாவது அரசைக் குறைந்த பட்சம் 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்டுத்திச் செயல்பட அழுத்தம் கொடுக்க முடியவில்லை. கொடுத்தாலும் ஏதும் நடப்பதில்லை. இவையெல்லாம் அவர்கள் சொன்ன விடுதலையா? தெரியவில்லை.

தன்னலமற்ற மக்கள் சேவைதான் தங்களது நோக்கு என்றுதான் எல்லா அரசியல்வாதிகளும் புறப்படுகிறார்கள். படிப்படியாக “தன்னலம்” ஒன்றுதான் அவர்கள் நோக்கமாகிறது. மக்கள் தலையில் மிளகாய் அரைப்பதும் காதில் பூச் சுற்றுவதும் புலம் பெயரில் எல்லாம் நடக்கிறது எனத் தங்கள் வசதிகளைக் காப்பாற்றிக் கொள்வதே பெருமளவில் காணக் கூடியது. இப்படியான நிலைப்பாடுகளால் புலம்பெயர் அமைப்பாளர்களால் புலம் பெயர் மக்களைக் கூட முன்னைய லட்சிய பிடிப்பிலோ அல்லதுஅந்த கொதி நிலையிலோ வைத்திருக்க முடியவில்லை. அவை மக்களின் விரக்தியா, அசிதிரத்தையா அல்லது அமைப்பாளர்களின் தவறுகளா எனப் பங்கு பிரிப்பது கஷ்டம். அதற்கிடையே வேறு பல அமைப்புகள் தோன்றியமை எந்த வழியில் பயணிக்கப் போகிறோம் என்பதிலும் குழப்பங்களை உண்டாக்கி மக்களின் எதிர்பார்ப்புகளிலும் ஏமாற்றங்களைத் தூண்டின.

இந்திய ஒப்பந்த காலத்திலிருந்தே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், பிரபாகரனது தலைமையில் நம்பிக்கை வைத்து ஒன்று சேர்ந்தும் முன்னேற வேண்டுமென்ற அறைகூவல் செய்து கொண்டிருந்த வண.பிதா இம்மானுவேல் வேறு சிலருடன் சேர்ந்து சர்வதேச தமிழ் மன்றத்தை (Global Tamil Forum) நிறுவி அதன் தலைவராக, சிங்கள, முஸ்லிம் மக்களினூடான புரிந்துணர்விலும் பேச்சு வார்த்தைகளிலுமே நாம் எமது உரிமைகளைப் பெறவேண்டும் என்றார். பெரிதளவு அரசின் பார்வையை இது தமிழ் மக்களின் ஒருபலம் வாய்ந்த அமைப்பு என்றரீதியில்பெற்றார். முன்வந்தசெவியை பின் வந்த கொம்பு மறைக்குமாம் என்பது போல – முக்கியமாக நல்லாட்சி அரசாங்க காலத்தில் – அரசு இவர்களுடனான



ரெஜி (தமிழர் புனர்வாழ்வு அமைப்பு)

பேச்சுவார்த்தைகளை முக்கியப்படுத்தி ஊக்கமும் கொடுத்தது. விடுதலைப் புலிகளின் அமைப்பாளர்களோ இது தங்களை சர்வதேசத்தில் பலவீனப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டது என்று கருத்துக்களைக் கூறினார்கள். நல்லாட்சியின் கடைசிக் காலங்களில் சர்வதேச தமிழ்மன்றின் (GTF) உறவுகளிலிருந்து விலகிவிட்டேன் எனக் கூறி, நாடு திரும்பி, தன்னைப் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கியும் தனிப்பட்டவராக சிவில் அமைப்புக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஒத்தாசையாக இருக்கிறார். எங்கள் மக்கள் சிங்கள மக்களின் ஏகாதிபத்திய பிடியிலிருந்து முற்றாக விடுதலை பெறவேண்டும் 'Please let my people go' (எனது மக்களைப் போக விடுங்கள்) எனக் கோரியவர்கள் எங்களது விடுதலை” என்றில்லாமல் உரிமை”யைத் தாருங்கள் என இணக்கம் காண்கிறார்கள்.

**355. வேறு பலவும் (பல அமைப்புகளும்) எழுந்தனவா? அவற்றைப் புலம் பெயர் அமைப்பாளர் கட்டுப்படுத்த முடியவில்லையா?**

வன்முறையைக் கைவிட்டு ஜனநாயக வழியில்தான் மேலும் போராட்டத்தைக் கொண்டு செலுத்தலாம் என்ற அணுகுமுறை, பரப்புரை கட்டவிழ்ந்தபோது, பலரும் அதனில் பயிரிட முன்வந்தார்கள். ஆயுதப் போராட்டத்துக்கு பாரிய பணமும் கட்டுப்பாடும் தேவை. ஜனநாயகக் கருத்தாக்கங்களுக்கு அவ்வளவான முதலீடுகள் தேவையில்லை. இவை வீட்டுத்தோட்டங்கள் மாதிரி தாம் தாமே பார்த்து கொள்ளலாம். அவை போன்று பலவகைதான் இப்பொழுது நாட்டுக்குள்ளேயே எழுந்து, மக்களைக் கலக்கு கலக்கி, எந்த சந்தையில் வாங்குவது என்று திணறடிக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளின் ஒருவித அதிகார அமைப்பாக தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (Tamil Coordinating Committee) சர்வதேசங்களில் தமிழர் செறிந்து வாழ்ந்த நாடுகளில் இருந்தன. இவற்றின் இணைப்பாக இயங்கியதுதான் தமிழர் இளைஞர் அமைப்பு (Tamil Youth Organisation) . அவர்கள்தான் போராட்ட காலங்களில் நடந்த எழுச்சிகளையும், பேரணிகளையும் நடத்தியவர்கள். சர்வதேச தமிழர் இளைஞர் அமைப்பு அன்புச் செல்வனின் கட்டுப்பாட்டில் இருந்தது. அவர் கே.பியின் ஆதரவாளராக இருக்கவில்லை. அதேபோல் லண்டனில் இருந்த பாம்பன் அஜித்தும் கே.பிக்கு ஆதராவாக இல்லாத அணியில் இருந்தார். அவர் ஒரு காலத்தில் பிரபாகரனின் பாதுகாப்பாளராக இருந்தவர். பின்னர் தளபதி கிட்டு லண்டனுக்கு 1989 இல் விஜயம் செய்தபோது அவருடன் சென்றவர். இவர்கள் போலவே தமிழர் புனர்வாழ்வு அமைப்பு (Tamil Refugee Organization) ரெஜி, அவருக்கு ஆதரவாக இருந்த முன்னைய தமிழ் ஈழ பொருளாதார முன்னேற்றத்தின் (TEEDOR) பொறுப்பாளர் றூட் ரவி ஆகியோரும் கூட கே.பியின் திட்டங்களை வரவேற்கவில்லை.

இவர்கள் எல்லோரும் தாம் தாம் இருந்த அமைப்புக்களின் அடிப்படையில், ஆனால் வன்முறையற்ற வழியில் பயணம் செய்ய விரும்பினார்கள். மக்களிடையே அடையாளங்களை இழந்துவிடக் கூடாது என்பது அவர்கள் ஆதங்கம்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (Tamil Coordinating Committee) உருவானதும் அதன் மாற்றங்களும் சுவாரசியாமானவை. அவற்றை பின்பு பார்ப்போம். ஆனாலும் பிணக்குகளிடையே, இருந்த அமைப்புகளை கலைக்காது, ஜனநாயகப் போர்வை தரக்கூடிய சிலவற்றை ஊக்குவிக்க விடுதலைப் புலிகள் முன் வந்தார்கள். போர்க் காலத்தில் பேரணிகளில் வந்து சேர்ந்தவர்களையும், ஆதரவு தந்தவர்களையும் ஒன்று கூட்டி ஓகஸ்ட் 2009 கடைசிக் காலப் பகுதிகளில் ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், கனேடிய தமிழ் காங்கிரஸ் என அமைப்புக்கள் தோன்றின.



வண.பிதா எஸ்.ஜே.இமானுவல்

ஆனால் லண்டனில் அந்த பெயரில் அமைப்பு தோன்றவில்லை. இருந்தவர்கள், பிரித்தானிய தமிழ் மன்றம்(British Tamil Forum - BTF) என்றே நின்றார்கள். ஆனால் இவர்களுடன் கூட்டுறவில் இயங்கினார்கள்.



ரூட் ரவி

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் ‘எங்கள் மக்களின், எங்கள் மக்களுக்காக, எங்கள் மக்களால்’ (Congress of our people, for our people and by our people) நீதியும் சமாதானமும் எங்களிடையே நிலவ வேண்டுமென்பதற்காகவும் எங்களது நல்வாழ்வு, செழிப்பு, சுதந்திரம், சம உரிமை, பாதுகாப்பு, சமாதானம் என்பதற்காக அமைக்கப்பட்டது எனவும், அதுவே அவர்களது மேலோங்கிய பார்வை (Vision) என்றும் சொல்லி, அமைப்பு ஆஸ்திரேலியாவில. வாழ்ந்த தமிழ் குடிமக்களை ஓர் உறுதியான, உடன்பாடான நடவடிக்கையில் தமிழர்கள் ஆதங்கம் கொண்டு அவர்களது சமூக, காலாச்சார அரசியலுக்கு ஆஸ்திரேலிய மரபுகளை பேணி, மற்றைய சமூகங்கள், அரசாங்கம், குழுக்களுடன் இணைந்து வேலை செய்வது அவர்களது பணியாகும் என்றும், தங்கள் குறிக்கோளாக தாங்கள் மனித,அரசியல் உரிமைகள் கோரும் சர்வதேச தமிழ் அமைப்பு ஒன்றின் அங்கமாக உலகளாவிய தமிழ் கூட்டின்(Collective Global Tamil செயல்பாடுகள், வினைதிறன் போன்றவற்றை தமிழ் மக்களின் வாழ்வுரிமை, அவர்களுக்குரிய சுயநிர்ணய உரிமை பற்றி எடுத்துரைத்து, உலகடங்கலில் அவர்களது நல்வாழ்வு, பொருளாதார அபிவிருத்திகளை மேம்படுத்தியும், ஸ்ரீலங்காவில் நடந்த இனப்படுகொலையின் கற்றுக் கொண்ட பாடங்களை வரும் சந்ததியினர் தெரிந்து கொள்ள வைப்பது தங்களது கொள்கை வகுப்பாகவும் அறி வித்தனர்.

அவைதான் மற்றைய அமைப்புகளின் கொள்கைகளாக இருக்கும் எனக் கொள்ளலாம்.

இவை தவிர, கே.பி. முன் வைத்த நாடு கடந்த தமிழீழ அரசும், உருத்திர குமாரனைப் பிரதமராக கொண்டு, அதற்கான நாடாளுமன்றத்திற்கு சர்வதேசத்தில் தேர்தல் நடத்தி, நாடாளுமன்ற அங்கத்தினர் அமைத்தனர்.

(வளரும்...)

# மத்திய வங்கி ஆளுநர் பதவி விலக அரசியல் அழுத்தங்களே காரணம்

## எரான் விக்கிரமரத்ன எம்.பி. போட்டுத் தாக்கு



இலங்கை மத்திய வங்கி என்பது அரச நிறுவனம் அல்ல. அது சுயாதீன நிறுவனமாகும். எனவே இவ்வாறான சுயாதீன நிறுவனங்களுக்கு உயர் அதிகாரிகளாக நியமிக்கப்படுபவர்கள் அரசியல் அழுத்தங்கள் காரணமாக தமது பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் பதவி விலகுவது பொருத்தமானதல்ல என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

மேலும் அஜித் நிவாட் கப்ராலுக்கு மத்திய வங்கி ஆளுநர் நியமனத்தை வழங்க முன்னர் 2002-2015 காலப்பகுதியில் மத்திய வங்கி விவகாரங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவிலுள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வை வழங்க வேண்டும் என்றும் எரான் விக்கிரமரத்ன வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மத்திய வங்கி என்பது அரச நிறுவனம் அல்ல. அது சுயாதீனமாக இயங்கும் ஒரு நிறுவனமாகும். எனவே இவ்வாறான சுயாதீன நிறுவனங்களின் பிரதானிகளாக நியமிக்கப்படுபவர்கள் அரசியல் அழுத்தங்களுக்காக பதவி விலகுகின்றமை பொருத்தமானதல்ல. ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் கூட அவர்கள் தமது பதவிக் காலம் நிறைவடைய முன்னர் பதவி விலகக் கூடாது.

மத்திய வங்கி ஆளுநர் நியமனத்தை அஜித் நிவாட் கப்ராலுக்கு வழங்க முன்னர் 2002 -2015 ஆம் ஆண்டு வரை மத்திய வங்கியின் விவகாரங்கள் தொடர்பில் கடந்த 2019 நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.-என்றார்.

# விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு அடுத்த வாரம் முதல் பைஸர் தடுப்பூசி

## சன்ன ஜயசுமன தகவல்



விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தடுப்பூசியை வழங்க முடியும் என்று பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதற்கமைய இவ்வாறான மாணவர்களுக்கான பைஸர் தடுப்பூசி வழங்கும் பணிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்துகையில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஒக்ரோபரில் 40 லட்சம்; பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கப் பெறவுள்ளன. இந்தத் தடுப்பூசிகளை பொருத்தமான முறையில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கு பரிந்துரைகள் கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இது தொடர்பான விசேட வைத்தியநிபுணர்கள்குழுஅவர்களின் பரிந்துரைகளை வழங்கியதன் பின்னர் அதற்கேற்ப அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தடுப்பூசியை வழங்க முடியும் என்று பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதற்கமைய இவ்வாறான மாணவர்களுக்கான பைஸர் தடுப்பூசி வழங்கும் பணிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்றார்.

# பதவியைத் துறந்தார் கப்ரால் இராஜினாமா கடிதம் கையளிப்பு



இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பதவியை ஏற்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அஜித் நிவாட் கப்ரால் இராஜினாமா செய்துள்ளார். நாடாளுமன்ற பதவியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை நேற்று (திங்கட்கிழமை) காலை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கப்ரால் கையளித்தார்.

இந்நிலையில் அஜித் நிவாட் கப்ரால் இராஜினாமா செய்ததை அடுத்து வெற்றிடமாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக ஜயந்த கெட்டகொடவை நியமிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முடிவு செய்துள்ளது.




# நாட்டுக்கு மேலுமொரு தொகை பைஸர் தடுப்பூசிகள் வந்தன

கொரோனாவைரஸ்தொற்றுக்கு எதிரான மேலுமொரு தொகை தடுப்பூசிகள் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

அதன்படி, 76 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகளே இவ்வாறு இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நெதர்லாந்தில் இருந்து குறித்த தடுப்பூசி தொகை கட்டார் ஊடாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஸ்புட்னிக்- வி தடுப்பூசியும் 40 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசியும் இந்த வாரம் நாட்டுக்குக் கிடைக்கப்பெறவுள்ளன.

# பாஷையூர் வாள்வெட்டுச் சம்பவம்; பிரதான சந்தேக நபர் இந்தியாவில்?


**ந.லோகதயாளன்.**

யாழ்ப்பாணம் பாஷையூர்ப் பகுதியில் வாள் வெட்டில் ஈடுபட்ட பிரதான சந்தேக நபர் இந்தியாவின் தமிழ் நாட்டிற்குள் ஊடுருவியுள்ளார் எனத் தெரிவித்து தேடுதல் பணி இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாணம் பாஷையூர்ப் பகுதியில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற வாள் வெட்டில் மூவர் படுகாயமடைந்தபோதும் ஒருவர் உயிரிழந்திருந்தார். இதனையடுத்து வாள்வெட்டில் ஈடுபட்ட குழுவினர் அடையாளம் காணப்பட்டு தேடுதலில் ஈடுபட்டனர். இதில்சிலர்சரணடைந்தபோதும் முக்கிய நபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு தலைமறைவாக வாழ்ந்தவர் கடந்த தினங்களில் இந்தியாவிற்கு தப்பிச் சென்றதான தகவலையடுத்து தமிழ் நாட்டில் தேடுதல் இடம்பெறுகின்றது.

# ஒரு தொகை கடலட்டைகளுடன் எருக்கலம்பிட்டியில் இருவர் கைது






இலங்கை கடற்படையினர் நேற்றைய தினம் மன்னார், எருக்கலம்பிட்டி பகுதியில் நடத்திய சிறப்பு நடவடிக்கையில் சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகை (72 ஆயிரத்து 542) கடலட்டைகளை பறிமுதல் செய்துள்ளனர்.

அத்துடன் இந்தக் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக இருவர் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 20 மற்றும் 46 வயதுடைய சாவகச்சேரி மற்றும் மன்னாரில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் கடலட்டைகள் மற்றும் கடத்தல் நடவடிக்கைக்காக அவர்கள் பயணித்த வாகனம் என்பன மன்னார் மீன்வள உதவிப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தல் சட்டம் மீறல்



சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று (திங்கட்கிழமை) காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப்பகுதியில் மேலும் 737 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 92 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 70 ஆயிரத்து 694 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேல் மாகாணத்தின் நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் நேற்று 1,057 வாகனங்களில் பயணித்த 1,705 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது உரிய அனுமதியின்றி மேல் மாகாண எல்லையைக் கடக்க முயன்ற 193 வாகனங்களில் பயணித்த 306 நபர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

# ஒரு தேசத்தின் ஒற்றுமை சகவாழ்விலேயே அந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது

## இத்தாலியில் பிரதமர் மஹிந்த



பொருளாதார, அரசியல் மற்றும் சமூக இலக்குகளை அடையும் போது பெரும்பாலும் எமது எதிர்காலம் ஒரு தேசம் என்ற ரீதியில் அதன் ஒற்றுமை மற்றும் சகவாழ்விலேயே தங்கியுள்ளது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இத்தாலியின் போலோக்னா நகரில் நடைபெறும் ஜி20 சர்வமத மாநாட்டின் ஆரம்ப தினமான கடந்த ஞாயிற்றுக்கிழமை முதலாவது அமர்வில் உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜி20 அரச தலைவர்களின் மாநாடு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30 - 31 ஆகிய இரு தினங்கள் இத்தாலி தலைநகர் ரோமில் நடைபெறவுள்ள நிலையில் அதனை முன்னிட்டு ஜி20 சர்வமத மாநாடு இடம்பெறுகிறது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜி20 சர்வமத மாநாட்டில் உரையாற்றினார்.

ஜி20 சர்வமத மாநாட்டில் பிரதமர் ஆற்றிய முழுமையான உரை வருமாறு -

'கலாசாரங்களுக்கிடையே சமாதானம், மதங்களுக்கிடையே புரிதல்' எனும் தொனிப்பொருளில் வரலாற்று சிறப்புமிக்க போலோக்னா நகரில் நடைபெறும் ஜி20 சர்வமத மாநாட்டில் உரையாற்ற கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை தொடர்பில் இத்தாலி ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் பேராசிரியர் அல்படோ மெலொனி உள்ளிட்ட ஏற்பாட்டுக் குழுவினருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டின் தொனிப்பொருள் குறிப்பாக எனது நாடான இலங்கைக்கும் தெற்காசியாவின் புவியியல் வலயத்துக்கும் பொருத்தமானதாகக் காணப்படுவதால் இந்தச் சந்தர்ப்பத்தை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

இன, மத மற்றும் கலாசார பன்முகத்தன்மை என்பன எமது பிராந்தியத்தின் முக்கிய அம்சமாகும். எமது நாடுகளில் பல்வேறு இன, மத மற்றும் கலாசார பின்னணிகளைக் கொண்ட மக்கள் வசிக்கின்றனர்.

எனினும், இந்த வேறுபாடுகளுக்கு மத்தியில் ஒன்றிணைந்து, பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்து, முதிர்நிலை தேசம் என்ற உணர்வைக் கட்டியெழுப்பும் சவாலுக்கு நாம் பதிலளித்துள்ளோம்.

பொருளாதார, அரசியல் மற்றும் சமூக இலக்குகளை அடையும் போது பெரும்பாலும் எமது எதிர்காலம் ஒரு தேசம் என்ற ரீதியில் அதன் ஒற்றுமை மற்றும் சகவாழ்விலேயே தங்கியுள்ளது.

தீவிரவாத சித்தாந்தங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வன்முறைகள் என்பன நமது யுகத்தின் மிக முக்கியமான சவால்களாகும்.

சரியாக இருபது வருடங்களுக்கு முன்பு நடந்த 9/11 பயங்கரவாதத் தாக்குதல்களின் சோகமான சம்பவங்களை இங்கே நாம் நினைவுகூர வேண்டும். அதில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருடன் நாம் அத்துயரத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

குற்றவாளிகள் மற்றும் அவர்களால் கூறப்படும் நோக்கம் என்னவாக இருப்பினும் இச்சம்பவம் அனைத்து விதத்திலும் பயங்கரவாதத்தை எதிர்த்து போராட வேண்டியதன் அவசியத்தை நினைவூட்டுகிறது.

இத்தகைய ஒரு தனித்துவமான தொனிப்பொருளில் ஒரு மாநாட்டை நடத்துவதற்கு கலை மற்றும் அறிவுபூர்வமான செயற்பாடுகளுக்கு அனைத்து வகையிலும் புகழ் மிக்க உலக மட்டத்தில் கலாசாரத்துக்குத் தலைமையான வரலாற்றுச் சிறப்புமிக்க போலோக்னா நகரம் மிகவும் பொருத்தமானதாகும்.

மனதை கவரும் இந்நகரம் இத்தாலியின் மறுமலர்ச்சி மற்றும் நாகரிக வளர்ச்சியை நிரூபிப்பதுடன், உலகின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்திய இத்தாலிய எஜமானர்களின் திறமை மற்றும் படைப்பாற்றலையும் பிரதிபலிக்கிறது.

எமது காலத்தின் கலாசாரத்திற்குள் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கு பெரும் பங்கு வகிக்கும் துறைகள் தொடர்பாக நீங்கள் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளீர்கள் என்பது மிகவும் தெளிவாக தயாரிக்கப்பட்டுள்ள இம்மாநாட்டின் ஆவணங்களின் மூலம் நான் புரிந்து கொண்டேன்.

இத்துறைகளில் கல்வியை மிக முக்கிய துறையாக அடையாளம் காண்பதற்கு நான் ஒருபோதும் தயங்க மாட்டேன்.

குழந்தை பருவத்தின்போதே சரியான அணுகுமுறைகளைப் போதிப்பதற்கும், மதிப்பை மேம்படுத்துவதற்கும் அதிக வாய்ப்புள்ளது.

வெவ்வேறு மதங்களின் சாராம்சத்தில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படினும், அனைத்து மதங்களினதும் நம்பிக்கை பொதுவானதாகும்.

எமது பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறைகளின் ஊடாக வேறுபாட்டை ஏற்படுத்தும் விடயங்களை விட, ஒருமைப்பாடுள்ள சகல மதங்களினதும் பொது விடயங்கள் தொடர்பில் வலியுறுத்துவதே கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வியியலாளர்களின் கடமையாக அமைய வேண்டும்.

எமது கல்வி நிறுவனங்களில் இளைஞர்களுக்கு வாழ்நாள் முழுவதற்குமான நட்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்புள்ளது.

நவீன தேவைகளுக்கேற்ப கல்வியின் உள்ளடக்கத்தை திருத்துதல் மற்றும் எமது இளைஞர்களை திருப்திகரமான வாழ்வாதாரத்தை நோக்கி ஈடுபடுத்துவதற்கே இலங்கை அரசாங்கம் தற்போது முன்னுரிமை வழங்கியுள்ளது.

முழு உலகமும் தற்போது எதிர்நோக்கியுள்ள கடுமையான சுகாதார நெருக்கடி, நம் அனைவரையும் ஒன்றிணைப்பதற்கு உதவியுள்ளது.

கொவிட் 19 நெருக்கடி பல்வேறு மதங்கள், இனங்கள் மற்றும் நாகரிகங்கள் என்ற வேறுபாடின்றி ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் மரண அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தொற்றிலிருந்து தப்பித்து மீண்டும் நமது வாழ்வை ஆரம்பிக்க வேண்டுமாயின் சர்வதேச ஒத்துழைப்பைப் பலப்படுத்த வேண்டும்.

நவீன மருத்துவத்தின் மூலம் கிடைக்கும் தடுப்பூசி மற்றும் பிற பாதுகாப்புகள் உலகம் முழுவதும் காணப்பட வேண்டியதுடன், சர்வதேச அமைப்பு மற்றும் வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளிடமிருந்து நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொருளாதார ரீதியில் வலுவற்ற நாடுகளுக்கான சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இது சிலர் மாத்திரமன்றி அனைவரும் வெற்றி பெறுவதற்கான போராட்டமாகும்.

தொற்று காரணமாக நாடுகள் தமது எல்லையைத் தற்காலிகமாக மூடுவது உகந்தது என்ற போதிலும், தனிமைப்படுத்தல் என்பது அதற்குத் தீர்வல்ல.

நாம் வாழும் உலகில் ஒரு யதார்த்தம் என்னவெனில், நாடுகளின் எல்லை ஊடாகப் பொருள்கள், சேவைகள் மற்றும் மக்களின் சுதந்திரம் இயக்கப்படுகிறது.

சிறந்த வாழ்க்கையை எதிர்பார்த்து மேற்கொள்ளப்படும் இடம்பெயர்விற்கு தற்போதைய நிலைமை சவாலாக விளங்குகின்ற போதிலும், சாதாரணமானதொரு கட்டமைப்பின் கீழ் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் சுதந்திரமாகக் காணப்பட வேண்டும்.

இது பாலின சமத்துவம் மற்றும் கண்ணியத்துக்கு விசேட முக்கியத்துவம் உள்ள துறையாகும். மிகுந்த அவதானம் மிக்க சமூகத்தினர் மீது காட்டும் இரக்கத்தின் மூலமே சமூகத்தின் ஒழுக்கத்தை மதிப்பிட முடியும் என புத்த பெருமான் உபதேசித்துள்ளார்.

வீடுகள், வேலை செய்யும் இடங்கள் மற்றும் சமூகத்தில் திருட்டில் ஈடுபடல் மற்றும் பல்வேறு பாகுபாடுகளுக்கு எதிராகவும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பிலும் எமது அரசாங்கம் மிகுந்த அவதானத்துடன் உள்ளது. மனித கடத்தலை முற்றிலும் ஒழிப்பதே எமது அணுகுமுறையாகும்.

காலநிலை மாற்றம் மற்றும் பிற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பாக நாம் முக்கியத்துவமளித்து செயற்பட்டு வருகின்றோம்.

மனிதவள அபிவிருத்தி தொடர்பில் ஒரு சீரான அணுகுமுறையை பின்பற்ற இலங்கை முயற்சித்து வருகிறது. வேகமாக வளர்ச்சியடையும் மக்கள் தொகைக்கு ஆதரவளிக்க பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்த முன்னேற்றம் அவசியமான போதிலும், நிலவும் சூழலில் அது முடியாததொரு விடயமாகும்.

நல்லிணக்கம் என்பது நம் காலத்தின் முக்கியமான தேவையாகும். மோதல்களும் நம்மைச் சுற்றி அதிகரித்து வரும் இடையூறுகளும் பொதுவானவை.

எங்களுடன் வலுவாக உடன்படாதவர்கள் உட்பட நம் நாடுகளில் வாழும் அனைவருடனுமான சிறந்த உறவின் மூலமே சமாதானமும், ஸ்திரத்தன்மையும் ஏற்படுகிறது.

வெறுப்பை வெறுப்பால் அல்ல அன்பினால் மட்டுமே வெல்ல முடியும் என்றே நம் மதம் நமக்கு போதிக்கிறது.

கடந்த காலத்தின் குறைகளைப் பற்றி விவாதிப்பதற்குப் பதிலாக, நாம் நிகழ்காலத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

நாம் சகோதரத்துவம் மற்றும் புரிதலின் ஊடாக உறவுகளை வளர்த்துக் கொண்டால் நாம் அனைவரும் எதிர்பார்க்கும் அற்புதமான புதிய எல்லையை அடையலாம்.

ஐரோப்பாவின் பழைமையான கற்றல் மையமான போலோக்னாவில் நடைபெறும் இந்த உற்சாகமூட்டும் மாநாடு அதற்கு மதிப்புமிக்க பங்களிப்பை அளிக்கிறது. ஏழு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் ஜி 20 சர்வமத மாநாடு, கலாசாரம் தொடர்பான கலந்துரையாடலுக்கான ஓர் அரிய வாய்ப்பாகும்.

இந்த மதிப்புமிக்க மாநாட்டின் ஆரம்ப அமர்வில் உரையாற்றுவதற்கு அழைப்பு விடுத்து நீங்கள் எனக்கு அளித்த கௌரவத்தை நான் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். பேராசிரியர் மெலானி மற்றும் அவரது ஏற்பாட்டுக் குழுவினருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், நீங்கள் முன்னெடுக்கும் இந்த மதிப்புமிக்க கலந்துரையாடல் வெற்றி பெறவேண்டும் என பிரார்த்திக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

## போக்குவரத்து சபை வடக்கு பிராந்திய முகாமையாளர் பதவிக்கு பெரும்பான்மை இனத்தவர் நியமிக்கப்பட்டார்

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு பிராந்திய முகாமையாளர் பதவிக்கு, அநுராதபுரத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு பிராந்திய முகாமையாளர் பதவி வெற்றிடமாக இருந்தது.

இந்நிலையில் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கான தகுதி, கிளிநொச்சி மற்றும் கோண்டாவில் சாலையில் கடமை புரியும் பொறியியலாளர்களுக்கு இருப்பதாக பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனாலும், திருகோணமலையில் கடமையாற்றிய குறித்த பெரும்பான்மை இனத்தவர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.



மேலும், அவர் தனது கடமைகளை கடந்தவாரம் பொறுப்பேற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மதுபான நிலையங்களை திறப்பதற்கு நடவடிக்கை!

*ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் சகல சில்லறை மதுபான நிலையங்களையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*அத்துடன் நீண்ட காலத்துக்கு பின்னர் மதுபானசாலைகள் திறக்கப்படவுள்ளதால், அதிகளவான வாடிக்கையாளர்கள் கூடுவதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே இதன்போது சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.*

# நடந்தாய் வாழி களனி கங்கை......!

கிறிஸ்டி நல்லரெத்தினம்
மெல்பன்


களனி கங்கை

புதுமைப்பித்தனின் 'ஆற்றங்கரை பிள்ளையார்' படித்திருக்கிறீர்களா? அவர் ஒரு புதிய எழுத்து வடிவை இக்கதையில் அறிமுகப்படுத்தினார்.


ஓர் ஆற்றங்கரையில் ஒரு பிள்ளையார் சிலை. அச்சிலையைச் சுற்றி ஊழிக்காலம் முதல் நிகழ்காலம் வரை நடைபெறும் மாற்றங்களை சிறு சம்பவக் குறியீடுகள் மூலம் கோர்த்துக் கதை புனைந்திருப்பார்.

இந்து சமயத்தில் பல நூற்றாண்டுகளாக ஏற்பட்ட வழிபாட்டு முறை மாற்றங்களை நாசூக்காக சொல்வதே அவர் நோக்கம். புதுமைப்பித்தனின் இக் கதையை படிக்கும் போது ஆவணப்படங்களில் இன்று கொட்டிக்கிடக்கும் 'நேரம் தப்பிய படப்பிடிப்பு' (Time-lapse photography) பார்த்த அனுபவம் கிட்டும்.

ஒரு காட்சி, கால நீரோட்டத்தில், எப்படி எல்லாம் மாறுகிறது என்பதை இந்த தொடர்காட்சிகள் சித்திரிக்கும். புதுமைப்பித்தனின் இந்த யுக்தி அவரின் எழுத்துப் புரட்சியின் ஒரு பரிமாணம்.

இலங்கையின் மூத்த நதி எனும் பெருமையை சூடிக்கொண்ட களனி கங்கையைச் சுற்றி பல ஆண்டுகளாக ஏற்பட்ட சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களை ஒரு தொடர் காட்சி ஆவணப்படம் போல் படைத்து எம் கைகளில் 'நடந்தாய் வாழி களனிகங்கை' எனும் நூலாக தவழவிட்டிருக்கிறார் எழுத்தாளர் முருகபூபதி. புதுமைப்பித்தன் கண்ட ஆற்றங்கரை பிள்ளையாரை களனி கங்கையில் காண்கிறார் ஈழத்தின் இந்த மூத்த எழுத்தாளர்.

களனி கங்கை அமைதியாக ஓடிக்கொண்டிருக்க, அதன் இரு மருங்கிலும் தன்னை புதுப்பித்துக் கொள்ளும் ஓர் உலகம் எப்படி மாற்றங்களுக்குத் தன்னை அர்ப்பணித்துப் புதிய மனிதர்களையும் அவர்கள் படைப்புகளையும் காலச்சக்கரத்துடன் இணைத்தது என்பதே இந்நூலின் கரு.




பதினேழு அத்தியாயங்களிலும் எழுபத்தியெட்டு பக்கங்களிலும் பொதிந்துள்ள தகவல்கள்தான் எத்தனை!?

ஒரு கலைக்களஞ்சியத்தை படித்த களைப்பு. எம் மனக்கல்லறையில் ஆழத்தோண்டி நீளப் புதைத்துவிட்ட நினைவுக்கோர்வைகளை மீளத்தோண்டியெடுத்து எம் கண்முன்னே படைக்கிறார் முருகபூபதி.

தொப்பிக்குள் இருந்து முயலெடுக்கும் மந்திரவாதியைப் போல் காலம் மறந்த எத்தனையோ மானுடர்களை எமக்கு மீள அறிமுகப்படுத்தி வியக்கவைக்கிறார். இவை சாதாரண காட்டு முயல்கள் அல்ல. அவை இலங்கை சரித்திரத்தையே மாற்றிப் போட்ட மகுடமணிந்த முயல்கள். அதே தொப்பிக்குள் இருந்து சில அரசியல் குள்ள நரிகளையும் எடுத்துப்போடும்போதுதான் நாம் வாயைப் பிளக்கிறோம்!

வாசகன் தோளில் கைபோட்டு எழுதும் நையாண்டி நடை, வார்த்தைச் சிக்கனம், நறுக்கென நயம்பட சொல்லும் பாணி...

வார்த்தைக்கு வண்ணம் பூசி, பந்திக்கு பாவாடை கட்டி, பல்லக்கில் ஏற்றிப்பார்க்காமல், சொல்ல வந்ததைச் சொல்லும் கண்ணியம். இவைதான் இந்நூலின் சிறப்பு. இவர் எழுத்தின் சிறப்பு என்பேன்.

சாண்டில்யனைப்போல் 'மன்னன் மகளின்' இடையில் இருபது நிமிடங்கள் செலவிடாத நடை.

'விசயத்துக்கு வாருங்கள்' என்று நீங்கள் சொல்லும் முன்பே விடயத்தைச் சொல்லிக் கடந்து போயிருப்பார். துரத்தித்தான் பிடிக்கவேண்டும்!

பல சரித்திரச் சம்பவங்களை லாவகமாக களனி கங்கையுடன் இணைப்பது ஒரு புது யுக்தி. அதுவே இக் கட்டுரைகளின் சிறப்பு என்பேன். ஒரு நெசவாளியின் கரிசனையுடன் மிக நேர்த்தியாக பின்னப்பட்ட 'கட்டுரை நூல் கம்பளத்தை' எம் கண் முன்னே விரித்துப்போட்டு 'ஏறிக்கொள்' என்கிறார் முருகபூபதி.

அலாவுதீனின் கம்பளமாய் அது மாறி எம்மை ஒரு கனவுலகிற்கே அழைத்துச் செல்லும் மாயையை என்னவென்று சொல்வதாம்?

1949 இல் நடந்த குதிரைப் பந்தயப்வ்பணம் நான்கு லட்சம் ரூபா கொள்ளை, 'களனி பாலம்' நாடகப் பின்னணி, களனி ரஜமகா விஹாரைக்கு கௌதம புத்தரின் விஜயம். பிரதமர் பண்டாரநாயக்காவின் கொலைச் சதி, மேர்வின் சில்வாவின் 'வாங்க மச்சான் வாங்க', சீதையை மீட்ட ஸ்ரீராம பக்த ஹனுமான், சேர். பொன்னம்பலம் அருணாசலம் பூர்வீகம், ஜிந்துப் பிட்டியின் மான்மீகம், தேசிய சுவடிகள் திணைக்களத்தின் 'எங்கட நவசோதி', களனி டயரின் கதை, சினிமாஸ் குணரத்தினத்தின் குறும் சரித்திரம், ஜே.ஆர் – வீரகேசரி தொப்புள்கொடி உறவு, சவர்க்காரத்தின் சரித்திரம், ஆமர் வீதி அஸ்பஸ்டஸ், கிங்ஸ்லி செல்லையா – எம்.ஜி.ஆர். நட்பு, சிங்கள திரைப்படத் துறையில் தமிழர் பங்கு, ஜனாதிபதி பிரேமதாஸாவின் முடிவு, ராஜா ஸ்டூடியோ ராஜப்பன், எம்.ஜி. ஆர். – சரோஜாதேவி இலங்கை விஜயம் என பல ருசிகரமான தலைப்புக்களை தடவிச் செல்கிறது இந்த மாயக் கம்பளம்.

இந்த எழுபத்திஎட்டுப் பக்கக் கட்டுரைகளை நூறாக, ஏன் இருநூறாகக்கூட எழுதி நீட்ட முடியும்.

இரு வரி திருக்குறளுக்கு பக்கம் பக்கமாக உரை எழுதவும் முடியும். அதே நேரம் பதினாயிரம் பாடல்களை அடக்கிய கம்பராமாயணத்தை கவிஞர் கண்ணதாசன் சுருக்கியது போல் இரு வரிகளில் இப்படி சொல்லவும் முடியும்:

கோடு போட்டு நிற்கச் சொன்னான்
சீதை நிற்கவில்லையே!
சீதை அன்று நின்றிருந்தால்
இராமன் கதை இல்லையே!

தமிழின் செழுமை இது. ஆனால் விரிக்கும் போது பொருள் கிழிந்து விடாமலும் சுருக்கும் போது அது சிதைந்துவிடாமலும் காப்பதே படைப்பாளியின் திறன்.

(10ஆம் பக்கம் பார்க்க...)


முருகபூபதி


களனி ரஜ மஹா விகாரை


பண்டாரநாயக்கா கொலைச் சந்தேகநபர்


களனி பாலம் நாடகம்

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நூலில் ஆசிரியர் சுருக்க வேண்டிய இடத்தில் சுருக்கியும், விரிக்க வேண்டிய இடத்தில் விரித்தும் எழுதியமை அவரின் எழுத்தாண்மைக்கு சான்று.

சம்பவங்களைச் சுருக்கி எழுதும் போது ஆசிரியர் உங்களின் தேடலின் வேட்கையின் திரியில் ஒரு தீப்பொறியை பற்றவைத்துக் கடந்து போகிறார். இங்குதான் உங்கள் ஆய்வுத் தேடல் ஆரம்பம்!

வாழைப்பழத்தை உரித்து வாசகனின் வாயில் வைப்பது ஒரு படைப்பாளியின் தொழிலல்லவே?

கட்டுரையின் கட்டமைப்பு வாசகனைச் சுண்டி இழுப்பதாய் அமைய வேண்டும் என்பது நியதி. புனைகதைகளில் பாத்திரப்படைப்பே இதைச் செய்துவிடும். ஆனால் கட்டுரையின் தூண்டில் புழுதான் அதன் முதல் வசனம். இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகளின் முதல் வசனங்கள் ஒரு முதுமொழியாகவோ அல்லது பழைய பாடல் வரிகளாகவோ இருப்பது மட்டுமல்லாமல் இனி வரவிருக்கும் கதைதான் என்ன என்ற ஈர்ப்பை வாசகன் மனதில் விதைக்கிறது. சில அத்தியாயங்களில் ஒரு விடுகதை போல் ஒரு முடிச்சை கட்டுரையின் ஆரம்பத்தில் போட்டுவிடுகிறார் ஆசிரியர். கட்டுரையின் கடைசி வரியில்தான் இந்த முடிச்சு அவிழும். முடிவைத்தேடி ஓடும் கண்களுக்கு அந்த அவிழ்ந்த முடிச்சு விருந்து படைக்கிறது.

முருகபூபதியின் எழுத்து நடையை விட அவரின் எழுதும் வேகம் எப்போதும் என்னை வியக்கவைப்பதுண்டு. அவருடன் பேசும் போது 'இப்போதுதான் இரண்டு கட்டுரைகள் எழுதி அனுப்பிவிட்டு வந்திருக்கிறேன்' என்று சாவகாசமாய் சொல்லும்போது அத்தொனியில் ஒரு படைப்பாளியின் பிரசவவேதனை துளியும் இருக்காது. இந்த எழுபதைத்தாண்டிய இளைஞனுக்கு எங்கிருந்துதான் வந்ததாம் இந்த சக்தி என நான் வியந்ததுண்டு.

வரிசையில் வந்து காத்து நிற்கும் வார்த்தைகளின் கழுத்தைப் பிடித்து காகிதத்தில் உட்காரவைப்பதுதான் இவர் வேலையோ என நான் எண்ணுவதுண்டு.

ஆச்சரியக் குறிகளை அள்ளித்தெளித்து, ஆரவாரம் தேடும் எழுத்துக்கள் அல்ல முருகபூபதியின் எழுத்துக்கள். அமைதியாக ஓடும் நீரோடையாக நெஞ்சை நனைத்துச் செல்லும் நித்திய வரிகள் அவை.

இந்நூலில் வரும் பல நிஜ மனிதர்களுடன் ஆசிரியர் நேரடித் தொடர்பில் இருந்திருப்பது வாசிக்கும் போது புலனாகிறது. இது இவருக்கு வீரகேசரி தந்த வெகுமதி என எண்ணுகிறேன். பல நினைவுகளைத் தன் சொந்த சந்திப்பு அனுபவங்களில் இருந்து அவர் எடுத்து பரிமாறும் போது அந்த புதிய வார்ப்புகள் எமக்கு தித்திக்கின்றன. நமக்கு மடி முட்டி, நுரை தள்ள பால் குடித்த பசுக்கன்றின் திருப்தி.

இந்நூலில் பல வருடங்களும் மாதங்களும் திகதிகளும் கொட்டிக்கிடக்கின்றன. அவைதான் உங்கள் மனக்குதிரையை கட்டிவைக்கும் இலாயங்கள். 'அட, நான் அப்போது எங்கிருந்தேன்?' எனும் உங்கள் சுயதேடலின் கேள்விக்கு விடை தேடி நூலில் விரித்த சம்பவத்துடன் இணைத்து மகிழும் உணர்வு இன்பமானது.

ஆனால், இந்த நாா குறிப்புகள் தானாய் வந்து கட்டுரையில் குந்திக்கொள்ளவில்லை. ஆசிரியரின் கடின ஆய்வுத்தேடலின் ஊதியமே இவை.. இவை இந்நூலுக்கு மேலும் கனதியை தருகின்றன என்பது ஒரு மறுக்கமுடியாத உண்மை.

# நடந்தாய் வாழி களனி கங்கை......!

இலங்கையின் நவீன கால வரலாறுகள் சமய, அரசியல் அல்லது பொருளாதார கண்ணோட்டத்தில் எழுதப்பட்டவை. ஆனால் இவ்வரலாறுகளின் பின்னால் உள்ள சம்பவக் கோர்வைகளே சரித்திரத்தின் செங்கற்கள். இவை பத்திரிகை செய்திகளாக வெளிவந்து பின்னர் பழைய பேப்பர்காரனிடம் கிலோ கணக்கில் நிறுத்து விற்றுவிட்ட சந்ததி நாம்.

நாம் இழந்த செய்தித் துணுக்குகளை இந்த ரசஞானி மீளத்தொகுத்து நூலாய் தந்திருக்கிறார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றம், தமிழ் பத்திரிகைத்துறையின் கூர்ப்பு, சிங்கள சினிமாவுக்கு தமிழரின் பங்களிப்பு, தமிழ் தொழிலதிபர்கள் எதிர்நோக்கிய சவால்கள் என இந்த செய்திப்பட்டியல் நீளும்.

நடந்தாய் வாழி களனி கங்கை முதலில் கிழக்கு இலங்கையிலிருந்து வெளியான அரங்கம் இதழில் தொடராக வந்துள்ளது. அதன் ஆசிரியர் சீவகன் பூபாலரட்ணம் இந்நூலுக்கு எழுதியிருக்கும் அணிந்துரையில், 'அந்த மண்ணில் வாழ்ந்த மக்களின் கதையை, உழைப்பை, உயர்வை, சுமையை,


கிறிஸ்டி நல்லரெத்தினம்
(கட்டுரையாளர்)

சோகத்தை, அழிவை, இரத்தத்தை தன்னுள் கலந்து ஓடும் களனி கங்கை தனது தீரத்தில் பார்த்த கதை இது' என பொருத்தமாகவே சான்றிதழ் வழங்கியுள்ளார்.

முன்னுரையில் முருகபூபதி, 'மலையிலிருந்து ஊற்றெடுத்து, காடு, நகரம், கடந்து வரும் போது


பண்டாரநாயக்கா

கரையோரத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்களை கண்டும் காணாமலும் தன்பாட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் எழிலையும் அதன் கரைகள் சொன்ன கதைகளையும் எழுதினேன்.' எனத் தன்னடக்கத்துடன் சொல்லிவைக்கிறார்.

இந்நூலின் பின்புற அட்டையில், சுபாஷினி சிகதரன் பின்வருமாறு எழுதியுள்ளார்:-

'களனியின் கரையோரம் எங்கனும் நடந்த கதைகளைச் சொல்லும் நூல். அரசியல், வர்த்தகம், கலை, எனக்கலந்து தருகின்ற கட்டுச்சாதக்கூடை. நாம் முன்பு அறிந்திராத பல வரலாறுகளின் உண்மைப் பின்னணிகளை இலக்கியச்சுவையுடன் பதார்த்தங்களாக்கிப் பரிமாறப்பட்டுள்ளது. ஆற்றின் போக்கையும் வேகத்தையும் அங்கங்கே மாற்றியமைக்கும் பாறைக்கற்கள் போல, ஆன்மீகம், தொடங்கி ஆடல் - பாடல் - திரையரங்குகள் வரை 'அரசியல்' எனும் ஒன்று, அடியில் இருந்து ஆட்டிவைப்பதை எல்லா அத்தியாயங்களும் குறிப்பிடுகின்றன.'

கொழும்பு குமரன் புத்த இல்லம் கனகச்சிதமாக இந்நூலை வடிவமைத்து வெளியிட்டுள்ளது.

புதுமைப்பித்தன் ஆற்றங்கரை பிள்ளையாரில் கண்ட அதே சமூக மாற்ற காட்சிகளை முருகபூபதி, களனி கங்கையில் கண்டார்.

அக்காட்சிகளை மிகச் சுவாரசியமாக நனவிடை தோய்ந்து எழுதிய இந்நூல் எம் நினைவுச் சக்கரத்தின் அச்சாணியாய் அமையும் என்பதில் ஐயமில்லை!

(குமரன் புத்தக இல்லம், 39, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை.)

(முற்றும்)

காலைக்கதிர் Kalaikkathir

# நூறுவீத உத்தரவாதத் தொகை தொடர்பில் பரிசீலிக்க வேண்டும்!

## ஆளும் தரப்பு உறுப்பினர் வலியுறுத்து

அத்தியாவசியமற்ற பொருள்களுக்கு விதிக்கப்பட்ட நூறுவீத உத்தரவாதத் தொகை தொடர்பில் அரசாங்கமும் மத்திய வங்கியும் பரிசீலிக்க வேண்டும் என ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பெரும்பாலான மக்கள் வீடுகளில் மின்விசிறிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதை சுட்டிக்காட்டி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் இடம்பெற்ற இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டிய அவர், நாட்டின் தற்போதைய நிலையில் இந்த நடவடிக்கை பாதகமாக அமையலாம் என்றும் கூறினார்.

எனவே கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யவும் குறித்த பட்டியலில் உள்ள சில பொருள்களை விலக்கி மக்கள் மீதுள்ள சுமையை குறைக்க மத்திய வங்கியின் ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கீதா குமாரசிங்க கேட்டுக்கொண்டார்.

# வர்த்தகர் ஹுசைனின் மரணம் படுகொலையாம் நான்கு வருடங்களின் பின் அவரது மகன் கைது

அடம் எக்ஸ்போ உள்ளிட்ட 9 நிறுவனங்களின் உரிமையாளரான பிரபல வர்த்தகர் கபீர் அப்பாஸ் குலாம் ஹுசைன், இயற்கையாக மரணிக்கவில்லை எனவும் அது ஒரு கொலை எனவும் கண்டறியப்பட்டுள்ள நிலையில், அந்தக் கொலை தொடர்பில் நான்கு வருடங்களின் பின்னர் அவரது இளைய மகன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சி.ஐ.டியின் பொது மக்கள் முறைப்பாட்டுப் பிரிவுக்கு கடந்த 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட சூட்சுமமான விசாரணையில் கொலையின் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

குறித்த வர்த்தகரின் மரணம் இயற்கையானது அல்ல, அது ஒரு கொலை என 2019 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட மூவர் கொண்ட விசேட சட்ட வைத்திய நிபுணர்களின் பிரேத பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நிலையில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ மேலும் கூறி னார்.

இதனையடுத்தே கோட்டே வீதி, எதுல் கோட்டே எனும் முகவரியைச் சேர்ந்த 37 வயதான சந்தேக நபர், விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை மையப்படுத்தி கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் தடுப்பூசியைப் பெறவும்

## இராணுவத்தளபதி அறிவுறுத்து



30 வயதுக்கு மேற்பட்டவர்கள் துரிதமாக தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

குறித்த வயது பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் இதுவரையில் 1,05,44,229 பேருக்கு இரண்டு தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

இந்த நிலையில், 30 வயதிற்கு மேற்பட்ட 1.14 கோடி பேரை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையில், இதுவரை 1.054 கோடி பேருக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

# 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு 3 கட்டங்களாக தடுப்பூசி வழங்க முடிவு

12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்காக தடுப்பூசி வழக்கும் வேலைத்திட்டம் மூன்று கட்டங்களாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுவர் நோய் நிபுணர்களின் நிறுவனத்தின் உறுப்பினர் வைத்திய நிபுணர் ஆர்.எம்.சுரன்ன பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக நாட்பட்ட நோய்கள் கொண்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். அதன்படி, செப்டெம்பர் மாத இறுதியில் இருந்து அவர்களுக்கான தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சிறுவர்களுக்காக பைஸர் தடுப்பூசியை மாத்திரம் பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் ஊடகத்துறையின் ....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினபதி நாடளாவிய ரீதியில் நடத்திய கையெழுத்துப் பத்திரிகை பல இளம் ஊடகவியலாளர்களை உருவாக்கியது. நான் நிருபராக இணைவதற்கு முன்னர் தினபதியின் கையெழுத்துப் பத்திரிகைத் திட்டத்தில் நாங்கள் வெளியிட்ட ஞானதீபம் இதழின் ஆசிரியராக இருந்தேன்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் சிவநாயகம் பற்றிச் சொல்லும்போது *“சுதந்திரனில் விட்ட தமிழ்ப்பணியை அவர் தினபதியிலும் சிந்தாமணியிலும் செய்தார்”* - என்பார்.

சிந்தாமணியில் அவர் எழுதிய ‘நான் கண்ட பாரதி’யை வாசிப்பதற்காகவே நானறியப் பலர் சிந்தாமணிக்காகக் காத்திருந்த நாள்கள் தமிழ் ஊடக வரலாற்றில் நகர்ந்துள்ளன.

ஞாயிற்றுக்கிழமை என்றால் தான் பிந்தி வந்தாலும், தனக்காக எனப் பத்திரிகைக் கடைகளில் வாசகர் கூட்டம் ஒன்றைக் காத்திருக்க வைத்த பெருமை, சிந்தாமணிக்கு அக்காலத்தில் இருந்தது.

1979 ஆம் ஆண்டில் அப்போதைய நீதி அமைச்சராக விளங்கிய அமரர் கே. டபிள்யூ. தேவநாயகத்தின் உதவியுடன் ‘சத்ய சாயிபாபா அறக்கட்டளையகம்’ எனும் சாயி அமைப்பையும் உருவாக்கினார் என அறிந்தேன்.

நான் ரூபவாஹினி கல்வி நிகழ்ச்சிப் பிரிவில் பணியாற்றிய போதுதான் அவருடன் நேரடியாகத் தொடர்புகொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. முதன் முதல் அவர் தான் எனக்கு தொலைபேசி மூலமாக ‘அழைத்தார்’.

*“திரு மாஸ்டர் சிவலிங்கம் அவர்களை நீங்கள் பயன்படுத்தலாமே?”* - என்று கேட்டார். மாஸ்டர் சிவலிங்கம் நான் தினபதியின் உடுப்பிட்டி நிருபராக பணியாற்றிய காலத்தில் தினபதியில் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தவர், அப்போது சிறுவர்களுக்கு விஞ்ஞான அறிவுக்கு கதைகளை ‘வளரும் உலகம்’ என்ற பெயரில் வெளிப்புற ஒளிப்பதிவில் அமரர் கே.எஸ்.பாலச்சந்திரனை கதை சொல்பவராகப் பாவித்து தயாரித்துக் கொண்டிருந்தேன்.

*“மாஸ்டர் சிவலிங்கம் ஒழுங்காக மட்டக்களப்பிலிருந்து வருவார் என்றால் தயாரிக்கலாம் சேர்”*என்றேன். *“அவரை உம்முடன் கதைக்கச் சொல்கிறேன். நேரம் உள்ள நேரம் வாரும். பேசலாம்.”* என்று அன்பாக அழைத்தார்.

மாஸ்டர் சிவலிங்கம் அவர்களை வைத்து ‘கதை நேரம்’ என்ற சிறுவர் கதை நிகழ்ச்சி ஒன்றைத் தொடராகத் தயாரிக்க ஆலோசனை வழங்கியவர் என்று கூடச் சொல்லலாம்.

அதற்குப் பின்னர்தான் நான் இடையிடையே அவரைச் சந்தித்தேன். நகைச்சுவையாக அரசியல், ஊடகத்தமிழ், ஊடகம் எனப் பல விடயங்களைச் சொல்லும் பண்பு மிக்கவர் அவர்.

அவரிடமும், இரா.பத்மநாதன் அவர்களிடமும் இலங்கைத் தமிழ் அரசியல் வரலாற்றில் அறிந்து கொள்ளப் பல விடயங்கள் இருந்தன.

அவருடன் தினபதியில் பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர்கள் பலர். அவர்கள் எம்மை விடப் பல அனுபவங்களையும் அறிவையும் அவரிடம் பெற்றும் கற்றுமிருப்பார்கள்.

இன்றைய நாள்களில் தமிழ் ஊடகத் துறையைப் பொறுத்தவரையில் நினைக்கப்படவேண்டிய ஒரு பெருமகன் அவர். எனது நினைவில் அவர் பற்றி இன்று வந்தவை இவை.

- இது நண்பர் வரதராஜனின் மனதில் இருந்து வந்தவை. (வளரும்)

# டெல்டா பரவல் குறையவில்லை வேகமாக பரவும் அச்சுறுத்தல்

## வைத்திய நிபுணர் சந்திம எச்சரிக்கை

கொழும்பு, செப். 14

நாட்டில் கொவிட் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டு நிலையொன்று காணப்படுகின்ற போதிலும் டெல்டா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலை குறையவில்லை எனவும், தற்போதும் அடையாளம் காணப்படும் வைரஸ் தொற்றாளர்கள் டெல்டா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளமையால் மீண்டும் வேகமாக டெல்டா வைரஸ் பரவக்கூடிய அச்சுறுத்தல் நிலை இருப்பதாகவும் ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவ பிரிவின் பணிப்பாளரும் வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர ஆய்வில் வெளிப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக நாட்டில் கொவிட் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதுடன், கொவிட் மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது, இந்நிலையில் வைரஸ் பரவல் நிலைமைகள் தொடர்பாக வினவிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

டெல்டா வைரஸ் நாட்டில் வேகமாக பரவிக்கொண்டுள்ளது, இறுதியாக நாம் முன்வைத்த ஆய்வறிக்கையில் கூட தொற்றாளர்களில் 95.8 வீதமானோர் புதிய டெல்டா வைரஸ் தொற்று தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை வெளிப்படுத்தியிருந்தோம்.

ஏப்ரல் மாதமளவில் இலங்கையில் டெல்டா வைரஸ் பரவல் கண்டறியப்பட்ட பின்னர் அன்று தொடக்கம் நாளாந்தம் டெல்டா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் நாடு மீண்டும் நீண்ட முடக்கத்துக்கு சென்றுள்ள நிலையில் நிலைமைகளை கட்டுப்படுத்த இது சாதகமாகவே உள்ளது. அதில் மாற்றுக்கருத்து இல்லை.

ஆனால் குறித்த ஒரு மாதகாலத்தில் கொவிட் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்பதற்காகவோ அல்லது கொவிட் மரணங்களின் எண்ணிக்கையில் குறைவைக் காட்டுகின்றது என்பதற்காகவோ நாடு பாதுகாப்பான நிலையில் உள்ளதெனக் கருதுவது தவறானதாகும். இன்னமும் நாட்டில் டெல்டா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலையே காணப்படுகின்றது.

அதேபோல் டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கும் வரையில் வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலைமையே இருக்கும்.

டெல்டா வைரஸ் வேகமாகப் பரவும் தன்மையை கொண்டுள்ள காரணத்தால் நாம் வைரஸ் தொற்றில் இருந்து முழுமையாக விடுபடுவது சவாலான விடயமே.

எனவே மக்கள் இப்போது மட்டுமல்ல தொடர்ச்சியாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி தமது மற்றும் அயலவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

## பொறுப்புக் கூறலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாத் தொற்றுத் தாக்கம், இராணுவமயப்படுத்தல், பொறுப்புக் கூறலை நிலைநாட்டத் தவறியமை ஆகியவை நாட்டில் அடிப்படை மனித உரிமைகள், சிவில் நடவடிக்கைகளுக் கான சமூக கட்டமைப்புகளுக்குரிய இடைவெளி, ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் பேண்தகு அபிவிருத்தி ஆகியவற்றில் பெரும் பாதிப்புத் தாக்கத்தைச் செலுத்துவதாக தெரிகின்றது

நாட்டில் உணவுப் பாதுகாப்பு மற்றும் விலை கட்டுப்பாடு ஆகியவற்றின் பெயரில் கடந்த 30 ஆம் திகதி அவசரகால நிலைமை கொண்டுவரப்பட்டு இருக்கின்றது. இது சிவில் செயற்பாட்டில் இராணுவமயப்படுத்தல் செயற்பாட்டையும் தலையீட்டையும் மேலும் அதிகரிக்கச் செய்யும் என்று கருதுகிறோம். அத னால் இந்த நிலைமையை உன்னிப்பாக கவனிக்கிறோம்.

சில சிவில் சமூகத் தலைவர்களுடன் ஜனாதிபதி சமீபத்தில் நடத்திய சந்திப்பை நாங்கள் ஆர்வத்துடன் நோக்குகிறோம்.

துரதிஷ்டவசமாக மனித உரிமைகள் பாதுகாவலர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மீதான கண்காணிப்பு, அச்சுறுத்தல் மற்றும் நீதித்துறைத் துன்புறுத்தல் ஆகியவை தொடர்கின்றன. அரசாங்கக் கொள்கைகளை விமர் சிக்கும் மாணவர்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் துன்புறுத்தப்படுவது மோசமான அளவுக்கு விரிவடைந்துள்ளது. பல அமைதியான போராட்டங்கள் மற்றும் நினைவு கூரல்கள் அதிகப்படியான பலம் பிரயோ கிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டுள்ளன. ஆர்ப் பாட்டக்காரர்களை கைது செய்தல், அவர்களைத்தனிமைப்படுத்தல்மையங்களில் முடக்குதல் போன்றவை தொடர்கின்றன.

சிவில்சமூக குழுக்கள் மீதான புதிய விதிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அடிப்படை சுதந்திரங்கள் மீதான கட்டுப்பாடுகளை அவை மேலும் கடுமையாக்கும் எனப் பரவலாக அஞ்சப்படுகின்றது.

அடிப்படை மனித உரிமை வழக்குகள் பலவற்றின் நீதித்துறை செயற்பாட்டின் மீது செய்யப்பட்ட தலையீடுகள் குறித்து நான் கவலைப்படுகிறேன். 2008 - 2009 ஆம் ஆண்டுகளில் 11 பேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்று சட்டமா அதிபரின் முடிவும் இதில் அடங்கும்.

2011 ஆம் ஆண்டில் அரசியல்வாதி ஒருவரைக் கொன்ற குற்றத்திற்காக மரண தண்டனை பெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி சமீபத்தில் வழங் கிய பொதுமன்னிப்பு, நாட்டில் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதி செயல்முறையில் மீதான நம்பிக்கையை சிதைக்கும் அபாயத்தை ஏற்படுத்தி உள்ளது.

பொலிஸ் காவலில் இடம்பெறும் கொலைகள் மற்றும் போதைப்பொருள் குற்றக் குழுக்களுடன் பொலிஸார் நடத்தும் 'என்கவுண்டர்கள்' மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளின் தொடர்ச்சியான சித்திரவதைகள் மற்றும் மோசமான நடத்தைகள் குறித்து நாங்கள் பெரிதும் கவலைப்படுகிறோம்

தனிநபர்களை இரண்டு ஆண்டுகள் வரை விசாரணையின்றி தன்னிச்சையாக நிர்வாகக் காவலில் வைப்பதற்கு வழி செய்யும் தீவிரப் போக்கு விதிமுறைகள் கடந்த மார்ச் மாதத்தில் கொண்டுவரப்பட்டமை கவலையைத் தருகின்றது. எனினும், இந்த விதிமுறைகளுக்கு எதி ராக நீதிமன்றம் தடையுத்தரவு விதித்திருப்பதை அவதானித்து இருக்கின்றோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக கருதப்பட்டு தண்டனை அனுபவித்து வந்த 16 கைதிகள் தண்டனை முடியும் தறுவாயில் மன்னிக்கப்பட்டனர். இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தங்கள் மீதான வழக்குகள் குறித்து மறு ஆய்வு செய்வதற்கு விண்ணப்பிக்கக் கூடிய ஓர் ஆலோசனை வாரியம் நிறுவப்பட்டுள்ளது. மேலும் இந்த நீண்டகால வழக்குகளுக்கு விரைவான தீர்வைக் காண வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கான தனது நோக்கத்தை அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இதற்காக அமைச்சரவைத் துணைக் குழு ஒன்றையும் அது அமைத்துள்ளது. ஆயினும் தொடர்ந்து மக்களைக் கைது செய்யவும் தடுத்து வைக்கவும் இச்சட்டத்தை பயன்படுத்துவது குறித்து நான் மிகவும் கவலைப்படுகிறேன். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் இச்சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தின் முன் நம்பகமான ஆதாரங்கள் வைக்கப்படாத நிலையில் 16 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அதேபோல ஆசிரியரும் கவிஞரு மான அஹ்னாவ் ஜஸீம் 2020 மே முதல் குற்றச்சாட்டு ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கான உடனடித் தடையை நான் வலியுறுத்துகிறேன்.

இழப்பீடுகளுக்கான தேசியக் கொள்கை கடந்த ஓகஸ்டில் அங்கீகரிக்கப்பட்டது. அதேநேரம் இழப்பீட்டு கொடுப்பனவுகள் மற்றும் நல்லிணக்க திட்டங்கள் தொடர்ந்தன. காணாமல் போனோருக் கான அலுவலகம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கிளிநொச்சியில் ஆறாவது பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. ஆனால் அது பாதிக்கப்பட்டவர்களிடையே நம்பிக்கையை ஊக்குவிக்க வேண்டும். வெளிப்படையான - பாதிக்கப்பட்டோரை மையப்படுத்தப்பட்ட - பாலின உணர்திறன் அணுகுமுறைகளின் முக்கியத்துவத்தை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அதே வேளை இழப்பீட்டுத் திட்டங்கள் விசாலமான உண்மை மற்றும் நீதி நட வடிக்கையுடன் அமைந்திருக்கவேண்டும்

இந்தப் பின்னணியில் கவுன்ஸிலின் 46/01 இலக்க தீர்மானத்தின் பொறுப்புக் கூறல் தொடர்பான அம்சங்களை ஏற்படுத்துவதற்கான எனது அலுவலகத்தின் பணி தொடங்கி உள்ளது. ஓர் ஆரம்ப குழுவின் ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே தரப்பட்ட ஒரு லட்சத்து 20 ஆயிரம் தனித் தனி ஆவணங்களுடன் ஒரு தகவல் மற் றும் ஆதார களஞ்சியத்தை நாங்கள் உருவாக்கி உள்ளோம். இந்த ஆண்டு, முடிந்த வரை தகவல் சேகரிப்பைத் தொடங்குவோம். இதற்குத் தேவையான நிதி உதவிகளை உறுதி செய்யுமாறு உறுப்பு நாடுகளை நான் கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் எனது அலுவலகம் இந்த வேலையை முழுமையாகச் செயல்படுத்த முடியும்.

இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் நம்பகமான முன்னேற்றத்தை பெற வேண்டும் என நான் நினைக்கிறேன். அதற்கு உதவும் வகையில் இலங்கையின் முன்னேற்றங்கள் தொடர்பில் தொடர்ந்து கவனம் செலுத்தவும் கவுன்ஸில் உறுப்பினர்களை நான் வேண்டுகிறேன்.- என்றார்.

---

## மலையக மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரிமைகள் சபையின் 48ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது. வருடத்துக்கு மார்ச், ஜூன், செப்டெம்பர் என மூன்று முறை இந்தக் கூட்டம் கூடும். இது தவிர உலகில் மனித உரிமைகள் கடுமையாக மீறப்படும் வேளைகளில் விசேட கூட்டங்களையும் நடத்தும் வழமை உள்ளது. அப்படியே 2009ஆம் ஆண்டு மே மாதம் இந்தக் கூட்டம் இலங்கை தொடர்பில் கூடியது.

நல்லாட்சியில் இலங்கை அரசும் ஒரு பங்காளியாக இணைந்து 2015இல் தீர்மானம் நிறைவேற்றி தன்னைத் திருத்திக்கொள்ளவும், நடந்த குற்றங்களுக்கு விடை தேடவும் இணங்கியது. பல காரியங்கள் நடந்தன, பல நடக்கவில்லை. ஆயினும், ஐ.நாவுடன் 'தமிழர்களின் வழக்கு' நல்லாட்சியில்தான் ஆரம்பமானது.

இந்த அரசு வந்தவுடன் அந்த 'வழக்கில்' இருந்து வெளியேறுவதாக ஆணவத்துடன் அறிவித்தது. அதையடுத்து, இவ் வருடம் 2021 மார்சில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டம் கூடி இலங்கை தொடர்பில் தீர்மானித்தது.

இதன்படி, தற்போது நடைபெறும் 48ஆவது கூட்டத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையர் இலங்கை பற்றி வாய்மூல அறிக்கை வெளியிட்டுள்ளார். அடுத்த 2022 மார்ச் 49ஆவது கூட்டத்தில், எழுத்து மூல அறிக்கை வெளியிடுவார். அடுத்த 2022 ஜூன் 50ஆவது கூட்டம் கடந்து போகும்.

அதையடுத்து 2022 செப்டெம்பரில் கூடும் 51ஆவது கூட்டத்தில் இலங்கையின் அதுவரையிலான மனித உரிமை நடத்தை தொடர்பில், ஆய்வு செய்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய சிபாரிசுகளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்வெளியிடுவார்.

அடுத்த வருட (2022) ஐ.நா. மனித உரிமைகளின் 49ஆம், 51ஆம் கூட்டங்கள் முக்கியமானவை.

இம்முறை கூட்டத்துக்கு தமிழர்கள் தரப்பில் பல கடிதங்கள் போயின எனக் குறைப்பட்டு, இருக்கின்ற ஒற்றுமையை இன்னமும் குறைத்துக்கொள்ளத் தேவையில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டங்களின்போது மாத்திரம் தூக்கத்தில் இருந்து எழும்பாமல், அனைவரும் விழிப்புடன் இணைந்து பயணிக்கலாம்.

அடுத்த வருட மார்ச், செப்டெம்பர் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டங்களின் அவதானத்துக்கு வரும் வகையில், தமிழ் முற்போக்குக் கூட்டணி பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள், குறிப்பாக மலையக மக்கள் இந்நாட்டில் எதிர்நோக்கும் அரசியல், சமூக, கலாசார, மனித உரிமை பிரச்சினைகள் தொடர்பில் எமது நிலைப்பாடுகளைத் தெரிவிப்போம். இதற்கான செயற்பாட்டு தொடர்பாடல்களை நாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம் - என்றார்.

---

## ராணுவத்தின் இறுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார். அதில் அவர் மேலும் கூறிய விடயங்கள் வருமாறு:-

சர்வதேச விசாரணை. அதை யார் செய்தார்கள், எவர் செய்தார்கள் என்பது விடயமல்ல.

இலங்கைப் படைத்தரப்பு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள், போர்க்குற்றம் இழைத்தார்கள், மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்பதுதான் நாங்கள் சொல்வது. அதை விசாரியுங்கள் என்று சொல்கின்றோம். அதற்கு முன்னேற்பாடாக ஐக்கிய நாடுகள் நிறுவனம் பல்வேறு இடங்களிலே பல்வேறு விசாரணைகளை நடத்தியிருக்கின்றார்கள். அதிலே அறிக்கைகள் வந்திருக்கின்றன. அப்படி இரு தரப்பு மீதும் வந்தவுடனே நாங்கள் அதனை வேண்டாம் என்று சொல்ல முடியாது.

நாங்கள் ஒன்றைத்தான் தொடர்ந்து கேட்கின்றோம். நீங்கள் நீதி விசாரணையை நடத்துங்கள், ஒரு நீதிமன்றப் பொறிமுறை விசாரணையை நடத்துங்கள் என்றுதான் கேட்கின்றோம். அந்த நீதிமன்றப் பொறிமுறை விசாரணையில் ஒருவரை (ஒரு தரப்பை) மட்டும் விசாரியுங்கள் என்று ஒருவரும் கேட்பதில்லை. கேட்க முடியாது. அது நியாயமானதாகவும் இருக்க முடியாது. அப்படிச் சொல்கின்றபோது, அதன் அர்த்தம் ஏதோ நாங்களாகத் தமிழீழ விடுதலைப் புலிகளை விசாரியுங்கள் என்று சொல்வதல்ல. அப்படிக் கூறுவது அபத்தமான குற்றச்சாட்டு. மக்களை முட்டாளாக்குகின்ற ஒரு குற்றச்சாட்டு. அப்படி எவருமே எந்தக் காலத்திலும் சொன்னமை கிடையாது.

ஆனால், ஒரு நீதி விசாரணையைக் கோருகின்ற தரப்பு நியாயமாகத்தான் கோரமுடியும். இதிலே புளொட், ரெலோ எல்லாரும் இருக்கின்றனர். அனால், அவர்கள் அதைச் (அப்படிச்) சொல்வதற்குக் காரணங்கள் இருக்கலாம். அவர்களுக்கு ஒரு நீதி விசாரணையும் நடக்காமலிருப்பது நல்ல விடயம். ஏனென்றால், படைத் தரப்பை விசாரித்தால், இறுதி யுத்தத்தில் படைத் தரப்போடு சேர்ந்து செயற்பட்டவர்கள் புளொட் உறுப்பினர்கள். யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்த யுத்தத்தில் எங்களுக்கும் பங்குண்டு என்று இராணுவத்தோடு வெற்றிவாகையைக் கொண்டாடியவர் சித்தார்த்தன். படைத்தரப்போடு யார், யார் ஒட்டுக்குழுக்களாகச் செயற்பட்டார்கள் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும். ஆகைகயால், சிலவேளைகளில் அவர்களுக்கு இந்த விசாரணை இல்லாமல் இருப்பது ஒரு நல்ல காரியமாகத் தென்படலாம்.

ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் அப்படியல்ல. நாங்கள் எந்தக் குற்றமும் புரிந்தவர்கள் அல்லர். விடுதலைப் புலிகளுக்கு எதிராக விசாரணை நடத்தவேண்டும் என்றும் நாங்கள் கேட்கவில்லை. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட - தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட - குற்றங்கள் விசாரிக்கப்படவேண்டும். அது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தால் அந்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டன. அது விசாரிக்கப்பட்டு தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்று மக்கள் சார்பாக நாங்கள் கேட்கின்றோம்.

நாங்கள் ஒளிக்கவேண்டியவை எவையுமே கிடையாது. ஒளிக்க நினைப்பவர்களுக்கு இது சங்கடமாக இருக்கலாம். அதனால் அவர்கள் சில நொண்டிச்சாட்டுக்களைச் சொல்லலாம்.

நாங்கள் பழையவற்றைக் கிண்டவில்லை. பழையவற்றைக் கிளறவில்லை. யுத்தம் முடிவடைந்து விட்டது. இப்போது நாங்கள் ஒன்றாகச் சேர்ந்துள்ளோம், அவர்களும் புறப்பட்டது தமிழ் மக்களின் விடிவுக்காக. அவர்களும் தங்களது உயிரைக் கொடுத்து ஆயுதம் ஏந்தியதும் தமிழ் மக்களின் விடிவுக்காகத்தான். இடையிடையே பல விடயங்கள் நடந்திருக்கலாம். ஆனால், இப்போது அதெல்லாம் முடிந்துவிட்டது. இப்போது நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடவில்லை. ஒருவரை ஒருவர் கொல்லவில்லை. நாங்கள் ஜனநாயக ரீதியில் - இராஜதந்திர ரீதியில் - தமிழ் மக்களுக்கான விடிவைப் பெறுவதற்கு நாங்கள் சேர்ந்து வருகின்றோம். அதில் எந்த விதமான பிரச்சினையும் இல்லை. புளொட் விசாரிக்கப்படவேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லையே. விடுதலைப் புலிகள், ரெலோ விசாரிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் கேட்கவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். இந்திய இராணுவத்தோடு செய்தவை பற்றியும் நாங்கள் கேட்கவில்லை.

ஆனால், தமிழ் மக்களுக்கு இறுதி யுத்தத்தில் நடந்த அநீதிகள் விசாரிக்கப்படவேண்டும் என்று நாங்கள் கேட்கின்றோம். அப்படி விசாரிக்கின்றபோது அந்த முடிவுகள் இலங்கைப் படைத்தரப்புக்கு எதிராகத்தான் முழுக்க முழுக்க வரும். ஆனால், இவர்களுக்கு எதிராகவும் வந்தால் நாங்கள் எதுவும் செய்ய முடியாது. அவர்களும் விசாரணை வேண்டுமென்று கேட்கிறார்களாம். அப்படித்தான் கூறுகின்றார்கள். - என்றார் சுமந்திரன்.

---

# கருத்தமர்வுகள் பிற்போடல்

யாழ்ப்பாணம், செப். 14

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் புற்றுநோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் தொடர்பில் நாளை புதன்கிழமை மற்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12:00 மணிவரை இளைஞர் யுவதிகளுக்காக நடைபெறவிருந்த பெரும் தொற்றுக்கான மன ஆரோக்கியம் மற்றும் இளையோரும் திறன்விருத்தியும் எனும் தலைப்புகளிலமைந்த சூம் செயலி ஊடான கருத்தமர்வுகள் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளன.

இந்த கருத்தமர்வுகள் நாளை மறுதினம் காலை 9.00 - 12.00 மணிவரை முறையே வாய்ப் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய் மற்றும் தொற்றா நோய் எனும் தலைப்பிலான விழிப்புணர்வுக் கருத்தமர்வுகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இக்கருத்தமர்வுகளில் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர்கள் கலந்துரையாட உள்ளனர்.

குறித்த நிகழ்வுக்கான மேலதிக விவரங்கள் மற்றும் இணைப்புக்களுக்கு அமைச்சின் இணையத்தள முகவரி http://edumin.np.gov.lk மற்றும் Facebook page: https://www.facebook.com/youthnorth ஆகியவற்றை அணுகவும். மேலும் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ள கருத்தமர்வுகள் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றின் விவரங்கள் உரிய காலத்தில் இவ் விணையங்களில் காட்சிப்படுத்தப்படும்.